பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 250

திங்கட்கிழமை
03 ஒகஸ்ட் 2026

ஆடி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057



## பிரதம நீதியரசரின் பதவி அதிகபட்சம் 6 ஆண்டுகளே

### அரசாங்கம் நடவடிக்கை

கொழும்பு, ஓக. 3
பிரதம நீதியரசரின் பதவிக் காலத்தை அதிகபட்சமாக 6 ஆண்டுகள் என வரையறுப்பதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாக ஆங்கில வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

»15

# இராணுவப் பிடியிலுள்ள காணிகளை விடுவிக்குக

## நூற்றுக்கணக்கான மக்கள் இணைந்து வயாவிளானில் நேற்றுப் போராட்டம்

**கொழும்பு, ஒகஸ்ட் 3**

இராணுவத்தின் பிடியிலுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி நூற்றுக் கணக்கான மக்கள் இணைந்து வயாவிளான் சந்தியில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

»15

### மஹர சிறைக்குள்

## கலவரத்தில் ஈடுபட்டோர் உச்சக் கண்காணிப்பில்!

கொழும்பு, ஓக. 3
மஹர சிறைச்சாலைக்குள் கலவரத்தில் ஈடுபட்டனர் எனச் சந்தேகிக்கப்படும் 104 கைதிகள் வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்டு அதியுச்சக் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளனர். தும்பர, வெலிக்கட, பூஸா,

»15

### மஹர சிறைக்கலவரம்

## நீதியமைச்சர் ஹர்ஷண பதவி விலக வேண்டும்!



### ரஞ்சித் மத்தும பண்டார வலியுறுத்து

கொழும்பு, ஓக. 3
மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்துக்குப் பொறுப்பேற்று நீதியமைச்சர் ஹர்ஷண உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று பிரதான எதிர்க்

»15

### வளிமண்டலத்தில் தளம்பல்

## வடமாகாணத்தில் மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 3
வளிமண்டலத்தின் மேலடுக்கில் ஏற்பட்ட தளம்பல் நிலை காரணமாக, வடக்கு மாகாணத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை வரை மழைக்குச் சாத்தியம்

»15

## பட்டாசு வெடித்து ஒருவர் துயரச்சாவு

யாழ்ப்பாணம், ஓக. 3
யாழ்ப்பாணத்தில் அதிசக்தி மிக்க பட்டாசு வெடித்துச் சிதறியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்

»15

### கட்டுப்பாட்டை இழந்து

## மோ.சைக்கிள் விபத்து இளைஞர் துயரச்சாவு!

மன்னார், ஓக. 3
மன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மருதமடு திருத்தலப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். அந்தோனி ஜெரோம் (வயது-18) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். மடுத்திருத்தல திருவிழா எதிர்வரும் 6ஆம்

»15



## இந்திய வெளிவிவகாரச் செயலர் இவ்வாரம் இலங்கைக்கு வருகை

கொழும்பு, ஓக. 3
இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் விக்ரம் மிஸ்ரி இந்த வாரம் இலங்கைக்கு வருகைதரவுள்ளார் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது. ஜனாதிபதி அநுர, பிரதமர் ஹரிணி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித், தமிழ்த் தேசிய அரசியற்

»15



## வல்வைப் படுகொலைகளின் நினைவேந்தல் உணர்வுபூர்வம்



யாழ்ப்பாணம், ஓக. 3
வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தால் கோரமாகப் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வல்வெட்டித்துறைச் சந்தியில் நேற்று மாலை நடைபெற்

»15

### புன்னாலைக்கட்டுவனில் சோகம்

## தமக்குத்தாமே தீமூட்டி சகோதரிகள் உயிர்மாய்ப்பு



யாழ்ப்பாணம், ஓக. 3
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பகுதியில் 18 வயதுடைய இரட்டைச் சகோதரிகள் தவறான முடிவெடுத்து தமக்குத் தாமே தீமூட்டி உயிர் மாய்த்துள்ளனர்.

»15

முச்சந்தி முரளி

"கலவரம் நடந்ததால ஹர்ண விலகோணுமோ இல்லாட்டி ஹர்ணவை விலக்கிறதுக்காக. கலவரம் நடக்குதோ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 02.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4509 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 06 22 63 76 |
| விசேட எழுத்து | W |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 02.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1576 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 06 31 33 39 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 02.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0535 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 7 2 0 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 02.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2615 |
| ஆங்கில எழுத்து | B |
| சுப்பர் இலக்கம் | 02 |
| வெற்றி இலக்கங்கள் | 15 39 48 65 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 02.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6267 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 8 8 5 5 7 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 02.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2297 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 15 24 44 82 |
| விசேட எழுத்து | O |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 02.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0383 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 18 36 55 |

# அரசியலமைப்பில் கைவைப்பதற்கு அநுர அரசுக்கு அதிகாரம் இல்லை!

## மனோ எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக.3

**நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை நீடிக்கும் அரசாங்கத்தின் தீர்மானம் நீதித்துறையின் சுயாதீனத்தை அச்சுறுத்தும் செயல். இந்தப் பிரச்சினையில் அரசாங்கம் தனது நேர்மையை நிரூபிக்க விரும்பினால் உடனடியாகப் பொதுஜன வாக்கெடுப்புக்கு போக வேண்டும் என்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இதுவொரு வரலாற்றுத் திருப்புமுனை மற்றும் அக்கினிப் பரீட்சையாகும்.

வழக்கு நிலுவைகளைக் குறைப்பதற்காகவே நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை உயர்த்தப் போவதாக அரசு கூறுவது ஒரு மோசடி. அன்று மஹிந்த ராஜபக்ச செய்த சட்டஆட்சிக்கு எதிரான சதியையே இன்று இந்த அரசாங்கமும் செய்ய முயல்கிறது. ஊழல் விசாரணைகளை நிறுத்துமாறு யாரும் கூறவில்லை. ஆனால், சட்டம் அனைவருக்கும் சமமாக இருக்கவேண்டும். அமைச்சர் வசந்த சமரசிங்க, பிரதியமைச்சர் மகிந்த சமரசிங்க, கடுவெல மாநகர முதல்வர் ரஞ்சன் ஜயலால் மற்றும் 300 கொள்கலன் விவகாரம், நிலக்கரிக் கொள்வனவு ஊழல், 2.5 மில்லியன் டொலர் காணாமற்போன விவகாரம் என அரச தரப்பினர் மீதான முறைப்பாடுகளும் விசாரிக்கப்பட்டு கைதுகள் இடம்பெறவேண்டும். ஒருதலைப்பட்ச நீதி என்பது அரசியல் பழிவாங்கலாகும்.

நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் ஜனநாயக ஆட்சியை அடையாளமாகக் கொண்டு வளர்ந்த ஜே.வி.பி. தனது பெயரைக் காக்க விரும்பினால் மக்கள் முன் போகவேண்டும். அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பவர்கள் மற்றும் மௌனமாக இருப்பவர்கள் குறித்து வரலாறு தீர்ப்பளிக்கும்- என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 02.08.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கம் | 6 0 2 9 8 5 |
| வெற்றி வாரம் | 0975 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 02.08.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3241 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 28 42 58 64 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 02.08.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 08 19 43 79 |
| வெற்றி வாரம் | 5402 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 02.08.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 1071 |
| வெற்றி இலக்கம் | 09 38 42 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 02.08.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| | மிதுனம் |
| வெற்றி இலக்கம் | 01 20 32 45 |
| சீட்டிழுப்பு வாரம் | 4953 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 02.08.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | S |
| சுப்பர் இலக்கம் | 13 |
| வெற்றி இலக்கம் | 24 29 47 58 |
| வெற்றி வாரம் | 2417 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 02.08.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 07 40 47 58 |
| வெற்றி வாரம் | 3067 |

## உடைமையில் போதைப்பொருள்; 4 ஆண்டுகள் சிறைத்தண்டணை

வவுனியா,ஓக.3

வவுனியா பறையனாளங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த நபருக்கு 4 ஆண்டுகள் கடுழீயச் சிறைத்தண்டனை விதித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் குறித்த நபர் 1.8 கிராம் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் வியாபாரம் செய்ய முற்பட்டமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டார்.

இதனையடுத்து, அவருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கடந்த 2021ஆம் ஆண்டு வவுனியா மேல்நீதிமன்றத்தில் குற்றப்பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு நீண்ட வழக்கு விசாரணையின் பின்னர் குறித்தவழக்கு தீர்ப்புக்காக கடந்த வெள்ளிக்கிழமை திகதியிடப்பட்டிருந்தது.

இதன்போது குறித்த குற்றச்சாட்டுகள் அரச சட்டவாதியினால் எதிரிமீது நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு 4 ஆண்டுகள் கடுழீயச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## கோம்பயன் மணல் வாய்க்கால் முதற்கட்ட புனரமைப்பு நிறைவு

யாழ்ப்பாணம்,ஓக.3

கோம்பயன் மணல் பிரதான வாய்க்கால் மற்றும் வடிகால் புனரமைப்புப் பணிகளில் முதற்கட்டமாக, 316 மீற்றர் நீளமுடைய பகுதி வெற்றிகரமாகத் தூர்வாரப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளது. யாழ்.மாநகர 10ஆம் வட்டார மக்களின் நீண்டகால வெள்ளப் பிரச்சினைக்கு நிலையான தீர்வை ஏற்படுத்தும் நோக்கில், கோம்பயன் மணல் பிரதான வாய்க்கால் மற்றும் வடிகால் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 1,140.5 மீற்றர் நீளமுடைய பிரதான வாய்க்கால் மற்றும் வடிகால் அமைப்புகள் கட்டம் கட்டமாக தூர்வாரப்பட்டுப் புனரமைக்கப் படவுள்ளன. (க)

## பலாலி இராஜேஸ்வரி ஆலய வீதி ஒரு மாதத்துக்குள் விடுவிக்கப்படும்!

யாழ்ப்பாணம்,ஓக.3

பலாலி ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்குச் செல்லும் வீதியை இன்னும் ஒரு மாத காலத்துக்குள் நிரந்தரமாக விடுவிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

ஆலய வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டுத் தற்காலிகமாகத் திறந்துவைக்கப்பட்டிருந்த வீதி மீண்டும் மூடப்பட்டதைத் தொடர்ந்து, எழுந்த கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, ஆலயத் திருவிழா நாள்களுக்காக மட்டுமே இந்தப் பாதை தற்காலிகமாகப் பயன்பாட்டுக்குத் திறந்து விடப்பட்டிருந்தது. இந்தப்பாதையை நிரந்தரமாகவே மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்துவிடுவதற்குத் தேவையான உயர்மட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில், இன்னும் ஒரு மாத காலத்துக்குள் இந்தப் பாதை முழுமையாக விடுவிக்கப்படும்- என்றார். (ச-27)

## 6 மாகாணங்களுக்கு 'அம்பர்' எச்சரிக்கை

கொழும்பு,ஓக.3

நாட்டின் ஊடாக நிலவும் தீவிர தென்மேற்குப் பருவக்காற்று நிலைமை காரணமாக, வடமத்திய, வடமேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களுக்கும் திருகோணமலை மாவட்டத்துக்கும் 'அம்பர்' நிறத்திலான பலத்த காற்று தொடர்பான எச்சரிக்கையை வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

குறிப்பிட்ட மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களில் விட்டுவிட்டு மணிக்கு 40 முதல் 50 கிலோ மீற்றர் வரையிலான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

கரையோரங்களை ஒட்டிய தாழ்வான நிலப்பகுதிகள் கடல் நீரால் மூழ்கடிக்கப்படும் அபாயம் உள்ளது. பொதுமக்கள் தற்காப்பு வழிமுறைகளைப் பின்பற்றி ஆபத்துகளிலிருந்து பாதுகாப்பாக இருக்கவேண்டும் என



றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# மஹர சிறைச்சாலை கலவரம்; விரிவான விசாரணை ஆரம்பம்

## சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவிப்பு!

**கொழும்பு, ஓக.3**

**மஹர சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஏற்பட்ட கலவரம் தொடர்பில் உடனடியாக விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் எனச் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் ஏ.சி. கஜநாயக்க தெரிவித்துள்ளார்.**

நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கலவரத்தின் போது சிறைக் கைதிகளால் சிறைச்சாலையின் பல முக்கியமான பகுதிகளுக்குக் கடுமையான சேதங்கள் விளைவிக்கப் பட்டுள்ளதுடன், சில பகுதிகள் முற்றிலும் அழிவடைந்துள்ளன.


சமையலறை, புனர்வாழ்வுக் கட்டடம், புனர்வாழ்வு அலுவலகம், தலைமைச் சிறைக் காவலர் அலுவலகம், சிறைச்சாலை மருத்துவமனை என்பன சேதமாக்கப்பட்டுள்ளன. சிறைச்சாலைக்குள் ஏற்பட்ட அமைதியின்மைக்கான சரியான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இது தொடர்பில் அனைத்துக் கோணங்களிலும்விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

சிறைச்சாலைக்குள் தற்போது முழுமையான அமைதியான சூழல் நிலவுகிறது. எனவே, அங்கு வருகை தந்துள்ள கைதிகளின் உறவினர்கள் அச்சமடையத் தேவையில்லை - என்றார். (ச-44)

# அஸ்வெசும நிதி மோசடி; பெண் அதிகாரிகள் கைது

கொழும்பு. ஓக.3

நோர்வுட் பிரதேச செயலகத்தில், பயனாளிகளின் சுமார் 30 இலட்சம் ரூபாவை மோசடி செய்த சந்தேகத்தின் பேரில் இரண்டு பெண் அதிகாரிகள் ஹற்றன் பொலிஸ் பிரிவின் விசேட புலனாய்வுப் பிரிவினரால் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப் பட்டனர். சந்தேகநபர்களான இரு பெண் அதிகாரிகளையும் நாளை செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. நிதி அமைச்சின் கணக்காய்வுப் பிரிவு அதிகாரிகளைக் கொண்ட 10 பேர் அடங்கிய குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போதே இந்த நிதி மோசடி தெரியவந்துள்ளது. (ச-இ)



உயர்தரப் பரீட்சை

# புலமைப்பரிசில் பரீட்சை விசேட வகுப்புகள் தடை

கொழும்பு.ஓக.3

2026ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்புகள், பாட நெறி விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு நாளைமறுதினம் 5ஆம் திகதி நள்ளிரவுடன் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. இதற்கமைய, பரீட்சை நடவடிக்கைகள் நிறைவடையும் வரை இந்தத் தடை அமுலில் இருக்கும். இந்தக் காலப்பகுதியில், ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கான எதிர்பார்க்கப்படும் வினாக்கள் அடங்கிய வினாத்தாள்களை அச்சிடுவதோ அல்லது விநியோகிப்பதோ கூடாது. 2026ஆம் ஆண்டுக்கான 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 9ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# விசேட வகுப்புகளுக்கு நாளை முதல் தடை!

கொழும்பு.ஓக.3

2026ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்புகள், பாட ரீதியான விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடத்துவது நாளை செவ்வாய்க்கிழமை நள்ளிரவுடன் நிறைவு செய்யப்படவேண்டும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் உயர்தரப் பரீட்சைக்கான அனுமான வினாக்களை உள்ளடக்கிய மாதிரி வினாத்தாள்களை அச்சிடுதல் மற்றும் அவற்றை விநியோகித்தல் என்பனவற்றை மேற்கொள்ள முழுமையாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. 2026ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 10ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# டீசலுக்குப் பதில் மண்ணெண்ணெய் பயன்படுத்தினால் சட்டநடவடிக்கை!

கொழும்பு.ஓக.3

பயணிகள் பேருந்துகளில் டீசலுக்குப் பதிலாக மண்ணெண்ணெய் கலந்து இயக்கப்படுவது கண்டறியப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

டீசலின் விலையை விட மண்ணெண்ணெயின் விலை குறைவாகஇருப்பதால், கூடுதல் இலாபத்தை ஈட்டும் நோக்கில் பல பேருந்து உரிமையாளர்களும் சாரதிகளும் டீசலுடன் மண்ணெண்ணெயைக் கலந்து பயன்படுத்துவது தெரியவந்துள்ளது. இந்தச் சோதனைகளில், இதுவரை சுமார் 100 பயணிகள் பேருந்துகள் அடையாளம் காணப்பட்டுச் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பேருந்துகளுக்குச் சட்டவிரோதமாக மண்ணெண்ணெய் விநியோகிக்கவோ அல்லது பயன்படுத்தவோ துணையாக இருப்பவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பத்தியெரியுது..!

**நாட்டில பத்தியெரியிற ஆயிரத்தெட்டுப் பிரச்சினை யில உந்தக் குப்பையள் பத்தி எரியிறதும் ஒரு பெரும் பிரச்சினையா மாறிக்கொண்டிருக்குது. அடிக்கடி கல்லுண்டாய்க் குப்பைதான் எரியுதெண்டு பார்த்தால் இப்ப கீரிமலையிலையும் குப்பையள் எரியத் தொடங்கியிருக்குது. கீரிமலையிலதான் குப்பையள் கொட்ட விடுறேலையே, பிறகெப்பிடி அங்க குப்பையள் எரியும்? எண்டு கேப்பியள். ஆனால் அங்கதான் விசயமே இருக்குது.**

**அந்த இடம் வலிகாமம் வடக்கு பிரதேசசபையின்ர ஆட்சிக்குள்ளதான் இருக்கு. அங்க முந்தி சுண்ணாம்புக் கல்லுக்காக வெட்டின பெரும் கிடங்குகளை பிறகு குப்பைக்கிடங்குகளா எங்கட ஆக்கள் மாத்திப்போட்டினம். இப்பிடி ஆழமா, தண்ணியோட டக்கெண்டு போய்க் கலக்கிற இடத்தில குப்பையைக் கொட்டினால் சுற்றுச்சூழலுக்கும் கேடு, தண்ணியும் பழுதாப் போடும். அதால அங்க குப்பையளைக் கொட்டவேண்டாமெண்டு அக்கம் பக்கத்தில இருக்கிற சனங்கள் எல்லாம் எதிர்ப்புக் காட்ட, சரியெண்டு அங்க குப்பை கொட்டுறதை வலிகாமம் வடக்கு பிரதேசசபையே நிப்பாட்டிப் போட்டுது. ஆனால் திடீரெண்டு இந்த மாதம் முதலாம் திகதியில இருந்து டிப்பர்களில குப்பையளைக் கொண்டுவந்து கொட்டத் தொடங்கியிருக்கினம். அதுவும் வலிகாமம் வடக்கு குப்பை இல்லை. வலிகாமம் தெற்கு பிரதேசசபையின்ர குப்பையை இஞ்ச கொண்டந்து கொட்டியிருக்கினம்.**

**இந்த விசயம் அரசல் புரசலா தெரிஞ்ச உடனேயே, வலி. வடக்கு பிரதேசசபை உறுப்பினர்மார், அங்கத்தை தவிசாளருக்கு விசயத்தைச் சொல்லியிருக்கினம். ஆனால் 10ஆம் திகதியாகியும் ஒரு நடவடிக்கையும் இல்லையாம். டிப்பர்கள் வாறதும், குப்பை மலை போலக் குவியிறதும் தொடர்ந்து நடந்திருக்கு. சபையின்ர அமர்விலயும் இதைப் பற்றி சில உறுப்பினர்மார் கேள்விகேட்டிருக்கினம். அதுக்கு, உக்கின கழிவுகளைத் தான் கொட்ட அனுமதிச்சனாங்கள் எண்டு தவிசாளரும் மழுப்பியிருக்கிறார். ஆனா சபை உறுப்பினர்கள் விடாமல், ஒரு துண்டு குப்பையைக்கூடக் கொட்டக் கூடாது, கொட்டின உக்காத குப்பைகளையும் கெதியில அள்ளோணும் எண்டு சபையில தீர்மானமே நிறைவேத்தியிருக்கினம்.**

**கதை இதோட முடியேல்ல. 27ஆம் திகதி வலி. வடக்குச் சுகாதாரக்குழு ஆக்கள் அங்கை போய் பார்க்கேக்க, ரெண்டு டிப்பர் வாகனங்களில குப்பையை அள்ளிக்கொண்டு கொட்டிறதுக்கு வந்திருக்கினம். உடனேயே தவிசாளருக்குப் போன் பண்ணி விசயத்தைச் சொல்லி, வந்த டிப்பர்களை அப்படியே திருப்பி அனுப்பிட்டு, குப்பைக்கிடங்கின்ர வாசல் கேற்றுக்கு பெரிய ஆமைப்பூட்டையும் போட்டுப் பூட்டினவை. ஆனால், அடுத்த நாளே அந்த ஆமைப்பூட்டை உடைச்சுக்கொண்டு உள்ளுக்க போன சில தறுதலைகள், அந்தக் குப்பைமேட்டுக்கு நெருப்பை வைச்சிருக்குதுகள். ரெண்டு நாளா குப்பை எரிஞ்ச புகையாலையும், அதால வந்த நாத்தத்தாலையும், பக்கத்தில இருக்கிற சனம் பட்டபாடு கொஞ்ச நஞ்சமில்லை. ஒரு பிரதேசசபை போட்ட பூட்டை உடைக்கிறதும், குப்பைக்கு நெருப்பு வைக்கிறதும் சாதாரண குற்றமில்லை. இதுக்கு இன்னமும் ஏன் வலி.வடக்குத் தவிசாளர் பொலிஸில முறைப்பாடு செய்யேலை எண்டதும் விளங்காமல் கிடக்கு. அதைவிட எப்பிடி அனுமதியில்லாமல் இன்னொரு பிரதேச சபை எல்லைக்குள்ள சுன்னாகம் பிரதேசசபைக்காரர் குப்பை கொட்டுவினம் எண்டதும் விளங்கேலை.**

**இன்னும் கொஞ்ச நாளில ஆடி அமாவாசை வரப்போகுது. பிதிர்க் கடமைகளைச் செய்யிறதுக்கு கீரிமலைக்கு லட்சக்கணக்கில சனங்கள் வருவினம். அதுக்கு முதல்ல கீரிமலையில கொட்டின கழிவுகளை முழுசா அள்ளிச் சுத்தப்படுத்தோணும். அதிகாரிகள் உடனடியாகக் காரியத்தில இறங்குவினமோ? இல்லை, ஆடியும் முடிஞ்சு சனம் நோயாளியா மாறுற வரைக்கும் வேடிக்கை பார்ப்பினமோ?**

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக.3

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் சுற்றாடல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் திறன் விருத்தி அலகு கணினிப் பயிற்சி மண்டபத்தில் (யாழ்ப்பாண பிரதேச செயலகம் அருகில்) இடம்பெறவுள்ளது.

வர்த்தக சமூகத்தினருக்கு திருத்தப்பட்ட சுற்றாடல் சட்டம், தடைசெய்யப்பட்ட பொலித்தின்-பிளாஸ்ரிக் வகைகள் மற்றும் அதற்கு பதிலாகப் பயன்படுத்தக்கூடிய மாற்றுப் பொருள்கள் தொடர்பில் குறித்த கருத்தரங்கு நடைபெறவுள்ளது. அனைத்து வர்த்தகர்களையும் நிகழ்வில் பங்குபற்றுமாறும், எதிர்காலத்தில் இதனால் மேற்கொள்ளப்படவுள்ள சட்டநடவடிக்கைகளைத் தவிர்த்து சுற்றாடல் நேயமுள்ள வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒத்துழைப்பு வழங்குமாறும் யாழ்.வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (ச-41)

## நல்லூர் ஆலயத்துக்கு புதிய வாசல் வளைவு



யாழ்ப்பாணம்,ஓக.3

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பெருமையை மேலும் மெருகூட்டும் வகையில், ஆலயத்தின் வடக்குப் பக்கமாக உள்ள வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அலங்காரத் தோரண வாசல் வளைவு விரைவில் திறக்கப்படவுள்ளது.

வளைவு அமைக்கும் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், நல்லூர்க் கந்தனின் 2026ஆம் ஆண்டு பெருந் திருவிழாவை முன்னிட்டுத் திறப்புவிழா இடம்பெறும். அதே வேளை, நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் தெற்கு வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அலங்காரத் தோரண வாசல் வளைவு தைப்பூச நாளான கடந்தவருடம் பெப்ரவரி மாதம் திறந்துவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-66)



கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு மகிழ்வோம் நிகழ்வு, சனசமூக நிலைய முன்றலில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ். கல்வி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் த.சிவகுமார், யாழ்.இந்துக்கல்லூரி ஆசிரியர் இ.சங்கீந் ஆகியோர் கலந்துகொண்டனர். (க)

## அனலைதீவில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஓக.3

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் யாழ். மருத்துவச் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் மாபெரும் இலவச மருத்துவ முகாம், எதிர் வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை, அனலைதீவு பிரதேச மருத்துவமனையில் நடைபெறவுள்ளது. இதில் பொதுமருத்துவ நிபுணர், குழந்தை மருத்துவ, அறுவைச் சிகிச்சை நிபுணர், தோல், சரும நோய்களுக்கான நிபுணர், சத்திரசிகிச்சை நிபுணர், பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவ நிபுணர், பல் மருத்துவம், அறுவைச் சிகிச்சை நிபுணர், கண் மருத்துவ நிபுணர் உள்ளிட்ட மேலும் பல மருத்துவர்கள் இணைந்துகொள்வர்.

மருத்துவ முகாமில் இலவச மருந்துகள் வழங்கப்படுவதுடன், தேவையான குருதிப்பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும். மருத்துவ முகாமுக்கு வருகை தருவோர் கிளினிக் கொப்பி மற்றும் மருத்துவ அறிக்கைகள் இருப்பின் தவறாமல் கொண்டுவருமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (க)

## 'கலாமோகனின் துவாரம்' நூல் அறிமுக நிகழ்வு!

யாழ்ப்பாணம்,ஓக.3

புலம்பெயர் தமிழரான கலாமோகனின் துவாரம் சிறுகதைத் தொகுப்பு நூல் அறிமுக விழா யாழ்ப்பாணம் டேவிற் வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. கவிஞரும் எழுத்தாளருமான கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அறிமுகவுரையினை வட கோவை வரதராஜன் நிகழ்த்தினார். புத்தக விமர்சன உரையை எழுத்தாளர் ச. குணேஸ்வரன் ஆற்றினார். நிகழ்வில் எழுத்தாளர்கள், கல்வியியலாளர்கள், வாசகர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-80)



## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். குடும்பத்தில் வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்குத் திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். முக்கியமான பிரமுகர்களின் தொடர்பு கிடைக்கும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியைக் காலையிலேயே தொடங்குவது நல்லது.

**சிம்மம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சிலருக்குத் தெய்வ வழிபாடுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். கூடியவரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக்கொள்வார்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# ஒரு தீர்ப்பும் சில விளைவுகளும்!

இலங்கையின் பாதுகாப்பையும் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தையும் அடியோடு உலுக்கிய , 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுப்பதற்குப்போதிய உளவுத்துறை எச்சரிக்கைகள் இருந்தும், கடமையைப் புறக்கணித்த குற்றத்துக்காக முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்குக் கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்தின் மூலம் மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பது, இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் ஒரு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய திருப்புமுனையாகும். அதிகாரத்தின் உச்சத்தில் இருப்பவர்களானாலும் சரி, கீழ்மட்டத்தில் இருப்பவர்களானாலும் சரி, தங்களின் அலட்சியத்துக்கும் தவறுகளுக்கும் சட்டத்தின் முன் பொறுப்புக்கூறியே ஆகவேண்டும் என்பதை இந்தத் தீர்ப்பு உறைக்கச் சொல்லியுள்ளது. தத்தித் தத்திச் சரியான பாதையில் மீண்டெழும் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான ஆகப்பெரும் 'நம்பிக்கை அழைப்பாணையாக' இத் தீர்ப்பு மாறியுள்ளது.

சர்வதேச வணிக உலகமும், வெளிநாட்டு நேரடி முதலீட்டாளர்களும் ஒரு நாட்டில் தங்களின் கோடிக்கணக்கான மூலதனத்தை முதலீடு செய்வதற்கு முதன்மையாக எதிர்பார்ப்பது அந்நாட்டின் 'சட்டத்தின் ஆட்சி' யையும், சுயாதீனமான நீதித்துறையின் செயற்பாட்டையும் தான். அரசியல் அழுத்தங்களுக்கு அப்பாற்பட்டு, உயர்பதவிகளில் இருந்த அதிகாரிகள்மீது வழங்கப்பட்டுள்ள இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு, சர்வதேச அரங்கில் இலங்கையின் சட்டக் கட்டமைப்பின் நம்பகத்தன்மையை பன்மடங்கு உயர்த்தியுள்ளது. வணிக ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், சொத்து உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இலங்கையின் நீதித்துறை அசைக்க முடியாத சுதந்திரத்தோடு இயங்குகிறது என்பதை உலகிற்கு பறைசாற்றும் சான்றாக இத்தீர்ப்பு அமைந்துள்ளது.

ஈஸ்டர் தாக்குதலுக்குப் பிந்தைய காலகட்டத்தில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும் தூணாகத் திகழ்ந்த சுற்றுலாத்துறை படுபாதாளத்தில் விழுந்ததுடன், நாட்டின் நிர்வாக அபாயமும் உச்சம் தொட்டது. ஆனால், இன்று அரச இயந்திரத்தின் அலட்சியங்களுக்குப் பொறுப்பான உயர் அதிகாரிகள் தண்டிக்கப்பட்டிருப்பதன் மூலம், எதிர்காலத்தில் உளவுத்துறை எச்சரிக்கைகள் மற்றும் அரச நிறுவனங்களின் பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்பட்டுள்ளது. இத்தகைய பாதுகாப்பான வணிகச் சூழல் உருவாக்கப்படும் போது, ஈஸ்டர் தாக்குதலால் நிலைகுலைந்த சுற்றுலாத் துறை, உட்கட்டமைப்பு, எரிசக்தி மற்றும் நிதித் துறைகளில் சர்வதேச நிறுவனங்கள் மீண்டும் தைரியமாக முதலீடு செய்ய முன்வரும் என்பதில் ஐயமில்லை.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுவரும் இலங்கைக்குச் சர்வதேச நாணய நிதியம் , உலக வங்கி மற்றும் மேலைநாட்டு அமைப்புகளின் கடன்களும் நிதி உதவிகளும் இன்றியமையாதவை. இவ்வாறான சர்வதேச அமைப்புகள் நிதி வழங்கும்போது சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் நல்லாட்சிக் கொள்கைகளுக்கே முன்னுரிமை அளிக்கின்றன. தவறிழைத்த உயர் அதிகாரிகளைத் தண்டிப்பதன் மூலம் இலங்கை வெளிப்படுத்தியுள்ள நல்லாட்சிப்பண்பு, சர்வதேசக் கடன் மறுசீரமைப்புப் பேச்சுவார்த்தைகளிலும் நாட்டின் நன்மதிப்பைப் பலம்பட உயர்த்தும். அத்துடன் உலகளாவிய கடன் தரவரிசை நிறுவனங்களின் மதிப்பீடுகளிலும், நாட்டின் இறையாண்மை ஆபத்துச் சுட்டியிலும் இது நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தும்.

சுருக்கமாகக்கூறின், இந்தத் தீர்ப்பு வெறுமனே இரண்டு உயர் அதிகாரிகளுக்கான தண்டனை மட்டுமல்ல; அது இலங்கை மண்ணில் 'நீதி உயிருடன் இருக்கிறது' என்பதையும்,' சட்டத்திற்கு முன்னாள் அனைவரும் சமம்' என்பதையும் உலகிற்கு உரக்கச் சொல்லியுள்ளது. நீதித்துறையின் இந்தச் சுதந்திரமான அடியெடுத்து வைப்பு, உலகளாவிய முதலீட்டாளர்களின் மனதில் உடைந்திருந்த 'நம்பிக்கை' என்ற அத்திபாரத்தை மீண்டும் அசைக்க முடியாதபடி பலப்படுத்தியுள்ளது. இத்தகைய வெளிப்படையான நல்நிர்வாகமும், அசைக்க முடியாத சட்டத்தின் ஆட்சியுமே இலங்கையை ஒரு நவீன, ஸ்திரமான பொருளாதார வல்லரசாக மாற்றுவதற்கான உண்மையான திசைகாட்டியாகும்!





## பொய்யாமொழி

**பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கண் செய்தலிற் றீது**

**பொருள்:** பலர் முன்னே பயனில்லாத சொற்களைச் சொல்லுதல், நண்பரிடத்தில் அறம் இல்லாத செயல்களைச் செய்தலை விடத் தீமையானதாகும்.



# ்குள் ஏற்றுமதி வருமானம் 36 பில்லியன் அமெரிக்க டொலர்

## அரசாங்கம் இலக்கு!



**கொழும்பு, ஓக.3**

**2030ஆம் ஆண்டுக்குள் இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானத்தை 36 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமாக உயர்த்துவதே அரசாங்கத்தின் பிரதான இலக்காகும் என வணிக மற்றும் வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் வலுவான பாதையில் கொண்டுசெல்வதற்கும், அந்நியச் செலாவணி இருப்பைக் கணிசமாக உயர்த்துவதற்கும் ஏற்றுமதித் துறையை மேம்படுத்துவது அவசியமாகும்.

அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கு ஆதரவாக, வர்த்தகம், முதலீடு, சுற்றுலா மற்றும் திறன்வாய்ந்த வேலைவாய்ப்புகள் ஆகிய நான்கு பிரதான துறைகளையும் சர்வதேச அளவில் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பொருள்களுக்கான புதிய சர்வதேசச் சந்தைகளை உருவாக்குவதுடன், தற்போதைய சந்தைகளில் ஏற்றுமதி அளவை அதிகரிக்கவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2030ஆம் ஆண்டுக்குள் 36 பில்லியன் டொலருக்கும் அதிகமான ஏற்றுமதி வருமானத்தை எட்டுவது வெறும் இலக்கு மட்டுமல்ல; நாட்டின் பொருளாதார மறுமலர்ச்சிக்கான அரசாங்கத்தின் உறுதிமிக்க திட்டமாகும் - என்றார். (ச-இ)


## சிகரெட்டுகளுடன் சீனப்பிரஜை கைது!

கொழும்பு, ஓக.3

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுத் தயாரிப்புச் சிகரெட்டுகளுடன் நபரொருவர் கட்டுநாயக்க விமானநிலைய சுங்க அதிகாரிகளால்நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 40 வயதுடைய சீனாவைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட சிகரெட்டுகளின் பெறுமதி 59 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)



## ஆமைகளுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 3

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியங்கூடல் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆமைகளை சட்டவிரோதமாக வைத்திருந்த ஒருவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இதன்போது அவரிடமிருந்து ஆறு கடலாமைகள் மீட்கப்பட்டன. அவரை அன்றையதினம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது. (ச-இ)

## இரத்மலானையில் ஓட்டோவில் சென்றவர் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஓக. 3

இரத்மலானை கந்தவல வீதியில் சற்றுமுன்னர் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவர் உயிரிழந்துள்ளார். முச்சக்கரவண்டி ஒன்றில் பயணித்தவரை இலக்குவைத்து மோட்டார் சைக்கிளில் பிரவேசித்தவர்களால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரிப்பு

மத்திய மலைநாட்டில் பெய்யும் கனமழையின் காரணமாக காசல்ரீ மற்றும் மவுசாகலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துவருகின்றது என்று பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த 24 மணிநேரத்தில் மவுசாகலைப் பகுதிகளில் 25 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் மொத்தக் கொள்ளளவை அடைவதற்கு 16 அடி 2 அங்குலம் அதிகமாகவுள்ளது, மேலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை நிலைவரப்படி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 26 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ரூ.15 மில்லியன் விசேட திட்டத்தில் 7,606 நாய்களுக்குக் கருத்தடை!

வடக்கில் இந்த வருடம் நடைமுறை

யாழ்ப்பாணம், ஓக.3


**வடக்கு மாகாணத்தில் வீதியோரங்களில் பெருகிவரும் கட்டாக்காலி நாய்களால் ஏற்படும் வீதி விபத்துகள் மற்றும் சுகாதாரச் சீர்கேடுகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் நோக்கில், இந்த ஆண்டில் 7,606 நாய்களுக்குக் கருத்தடைச் சத்திரசிகிச்சை அளிப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் உள்ளூராட்சித் திணைக்களமும் இணைந்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன. இந்தச் செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக வவுனியா மாவட்டத்தில் இதுவரை 72 நாய்களுக்கான கருத்தடைச் சத்திரசிகிச்சைகள் நிறைவுறுத்தப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து ஏனைய மாவட்டங்களிலும் இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய இன்று திங்கட்கிழமை யாழ்.மாநகரசபையிலும், நாளை செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேசசபையிலும், எதிர்வரும் 23ஆம் திகதி வவுனியா மாநகர சபையிலும் இந்தத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள புதிய விலங்கு நலச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, விலங்குகளின் உரிமைகள் மற்றும் நலன்களுக்கு அதியுயர் முன்னுரிமை அளித்து இந்தச் சத்திரசிகிச்சைகள் முன்னெடுக்கப்படுகின்றன - என்றுள்ளது. (சு-113,27,66)



## நாகர்கோவில் காட்டுப்பகுதியில் பனைமரங்கள் வெட்டிச்சாய்ப்பு!

யாழ்ப்பாணம்,ஓக.3

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் தெற்குக் கிராமத்தின் வீதியோர சவுக்குங்காட்டுப் பகுதிக்குள், அதிகளவாக பனைமரங்கள் விசமிகளால், வெட்டி அழிக்கப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். குறித்த காட்டுப்பகுதிக்குள் ஆள் நடமாட்டம் இல்லாத நேரங்களைப் பயன்படுத்தி நுழையும் விசமிகள், அங்கிருக்கும் பெறுமதிமிக்க பனைமரங்களுக்குச் சட்டவிரோதமாக நெருப்பு வைத்து அழித்துவருகின்றனர்.

அத்துடன், தங்களுக்குத் தேவையான மரப்பகுதிகளை வெட்டி எடுத்துச்சென்று வியாபார நோக்கத்துக்காகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இதுதொடர்பில் பொலிஸாரும் நடவடிக்கை எடுப்பதில்லை என்றும் அந்தப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (சு)




## பலாலி விமானநிலையப் பணிகளை பார்வையிட்ட கடற்றொழில் அமைச்சர்

யாழ்ப்பாணம்,ஓக.3

யாழ்ப்பாணம் பலாலி விமானநிலையத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகளை கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நேற்றுமுன்தினம் நேரில் பார்வையிட்டு, பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக துறைசார் அதிகாரிகளுடன் விரிவான கலந்துரையாடலை மேற்கொண்டார். இதன்போது, பயணிகள் புறப்பாடு மற்றும் வருகைப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டங்கள், புதிய கட்டட வசதிகள், பாதுகாப்பு மற்றும் சேவை வசதிகளை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அதிகாரிகளிடமிருந்து விரிவான விளக்கங்களைப் பெற்றுக்கொண்டார். அதேவேளை, திட்டமிட்ட காலக்கெடுவுக்குள் பணிகளை நிறைவுசெய்வதன் அவசியத்தையும், எதிர்காலத்தில் அதிகளவிலான உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானசேவைகளை கையாளக்கூடிய வகையில் அனைத்து வசதிகளும் உயர்தரத்தில் அமைக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார். (ச-26)

## சிறுபோக நெற்கொள்வனவை ஒட்டுசுட்டானில் துரிதப்படுத்துக

பிரதேச மக்கள் கோரிக்கை!



முல்லைத்தீவு,ஓக.3

2026ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்கொள்வனவை விரைவுபடுத்தமாறு, ஒட்டுசுட்டான் பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன், ஒட்டுசுட்டான் விவசாயிகளைச் சந்தித்தபோது அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்தனர். வித்தியாபுரத்தில் அமைந்துள்ள நெல்சந்தைப்படுத்தல் சபைக்குரிய நெற்களஞ்சியசாலையில், கடந்த 3 போகங்களின் போது, விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நெல் தேங்கிக்கிடக்கின்றது. இதனால் சிறுபோகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லைச் சந்தைப்படுத்த முடியாதுள்ளது. எனவே வித்தியாபுரம் நெற்களஞ்சியசாலையில் தேங்கிக்கிடக்கின்ற நெல்லை விரைவாக அகற்றி, நெற்கொள்வனவை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு விவசாயிகள், நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்தனர். (க-246)

## தூய ஒளி கிண்ணம் தொடர்; சென்.மேரிஸ் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம்,ஓக.3

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் மற்றும் யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன், குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் கொண்ட வடமாகாண ரீதியிலான 'தூய ஒளி கிண்ணம் 2026' உதைபந்தாட்டத் தொடரில், நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் மூன்றாமிடத்தைக் கைப்பற்றியது.



நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் விளையாட்டுக்கழகம் மூன்றாமிடத்துக்கான போட்டியில் மோதின. ஆட்டத்தின் ஆரம்ப விசில் முதல் இறுதி விசில் வரை அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய நாவாந்துறை சென். மேரிஸ் 3:0 என்ற கோல் கணக்கில் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் அணியை வீழ்த்தி, தூய ஒளி கிண்ணம் 2026 தொடரின் மூன்றாம் இடத்தைத் தமதாக்கியது. (சு)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media



'நேர்மையான கலாசாரம் - தூய்மையான இலங்கை' தேசிய செயற்பாட்டின் ஒரு பகுதியாக, யாழ். மாவட்டச் செயலகத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானப்பணி கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (க-25)

# மக்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஓக.3
தேசிய மக்கள் சக்தியின், சிறப்பு 'மக்கள் சந்திப்பு' வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தின், மருதங்கேணி கலாசார மத்திய நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள், அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கை குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன மற்றும் பொது மக்கள் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (க-80)





13 வயதுப் பிரிவினருக்கான கரப்பந்தாட்டப் போட்டியில், அச்சுவேலி மத்திய கல்லூரி அணி, யாழ்.மாவட்ட சம்பியனாகி தேசியமட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. (க)



சுழிபுரம் கே.ஏ.எஸ். சத்தியமனை நூலகம், நான்காவது வருடமாக நடத்தும் ஓவியப்போட்டி கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நான்கு பிரிவுகளாக நடத்தப்பட்ட போட்டியில், 30 பாடசாலைகளிலிருந்து சுமார் 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர். (க)



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின், சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மாதாந்தம் வெளியிடப்படும் ஆன்மிக மலரான ஞானச்சுடர் 343ஆவது இதழ், கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது. (க-80-66)



# சமுர்த்தித் திட்ட வீடு கையளிப்பு

யாழ்ப்பாணம், ஓக.3
சமுர்த்தி வீட்டுத்திட்டத்தின் ஊடாக, ஊர்காவற்றுறை தம்பாடிப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வீடு, உரிய பயனாளிகளிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அலுவலர் ஆகியோர் கலந்துகொண்டனர்.. (க-25)

கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியில், மாணவர் நாடாளுமன்றக் கன்னி அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி உதவித் தேர்தல் ஆணையாளர் வேலாயுதம் சிவராசா, சிறப்பு விருந்தினராக சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பூ.திருக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துடுப்பாட்டப் போட்டியில் அக்கராயன் ம.வி. வெற்றி

கிளிநொச்சி,ஓக.3

இலங்கை கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்ட பதினைந்து வயதுக்குட்பட்ட துடுப்பாட்டப்போட்டியில், அக்கராயன் மகாவித்தியாலயம் வெற்றி பெற்றது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற போட்டியில், கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியுடன், அக்கராயன் மகாவித்தியாலய அணி மோதியது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் 31 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

முதல் இன்னிங்ஸில் களம் இறங்கிய அக்கராயன் மகாவித்தியாலய அணி 137 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இரண்டாம் இன்னிங்ஸில் களம் இறங்கிய கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி 68 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. அக்கராயன் மகாவித்தியாலயம் அணி 33 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக அலன் ஜெனிஸ்ரன் தெரிவுசெய்யப்பட்டார். (க)

நயினாதீவு இரட்டங்காலி ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்ரமணியப் பெருமான் ஆலயப் பெருந்திருவிழாவின், தேர்த்திருவிழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (க-66)



நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் அ.த.க.வித்தியாலயத்தில், நெடுந்தீவுக் கோட்ட மட்ட துரித கணிதப் போட்டி மற்றும் தீவக வலய மட்டசித்திரப் போட்டி ஆகியவற்றில் வெற்றியீட்டிய மாணவர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். (க)





சாவகச்சேரி நகரசபையின் கல்வயல் வட்டார உறுப்பினர் இ.யோகநாதன், தனது ஜூலை மாதக் கொடுப்பனவில் கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்துக்கு மின்விசிறியும் பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு வேலி அடைக்க முட்கம்பியும் வழங்கிவைத்தார். (ச-9)




# கண்டாவளையில் நடமாடும் சேவை

கிளிநொச்சி,ஓக.3

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில், நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருந்த காணிப்பிரச்சினைகளுக்கான நடமாடும் சேவை, பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது நீண்ட காலமாக நிலுவையில் இருந்த பல காணிப்பிணக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, சம்பந்தப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, உரிய தீர்வுகள் வழங்கப்பட்டன. நடமாடும் சேவையில் மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன், வடமாகாணக் காணி ஆணையாளர் இ.குருபரன், மேலதிக மாவட்டச் செயலர் (காணி) அஜிதா பிரதீபன், கண்டாவளைப் பிரதேச செயலர் த.பிருந்தாகரன், வடமாகாண உதவிக் காணிஆணையாளர்விதுசா தினேஸ்,மாகாணக் காணி ஆணையாளர் திணைக்கள அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலக அலுவலர்கள் கலந்துகொண்டனர். (க-113)




# விவாத இறுதிப்போட்டியில் கிளி.இந்துக்கல்லூரி வெற்றி

கிளிநொச்சி,ஓக.3

கிளிநொச்சி மாவட்ட விவாதிகள் கழகத்தால், தெரிவு செய்யப்பட்ட, கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட விவாத இறுதிப்போட்டியில், கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி வெற்றி பெற்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன்விருத்தி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இறுதிப்போட்டியில், வட்டக்கச்சி மத்திய கல்லூரி மற்றும் கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணிகள் மோதின.

வடகிழக்கின் பௌதீக, மானுட வளங்கள் பொருளாதார ரீதியாக சரியாகக் கையாளப்படாமைக்கான காரணம் மக்களே என்ற தலைப்பில் வட்டக்கச்சி மத்திய கல்லூரியும், வடகிழக்கின் பௌதீக, மானுட வளங்கள் பொருளாதார ரீதியாக சரியாகக் கையாளப்படாமைக்கான காரணம் அரசே என்ற தலைப்பில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணியும் மோதியிருந்தன. இறுதிப்போட்டியில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி வெற்றி பெற்றது. (க-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசியல் தீர்வுக்கான முதற்படி 13ஐ நடைமுறைப்படுத்துவதே

## ஜீ.எல். பீரிஸ் வலியுறுத்து!

கொழும்பு, ஓக.3

**இலங்கையின் நீண்டகால இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதற்கு மாகாணசபைத் தேர்தல்களை நடத்தி 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதிலிருந்தே அதற்கான தொடக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 2000ஆம் ஆண்டு ஓகஸ்ட் 3ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில், இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வுத்திட்டமொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தேன்.

அனைத்துத் தரப்பினராலும் ஒரு முற்போக்கான திட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்த ஆவணம், அன்றைய இரு பிரதான கட்சிகளுக்கிடையிலான குறுகிய அரசியல் போட்டி காரணமாகக் கைவிடப்பட்டது.

கடந்தகாலத் தவறுகளைப் பற்றியே தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதைவிட, நிகழ்காலத்தில் சாத்தியமான நடைமுறைச் சாத்தியங்களை நோக்கிச் சிந்திப்பதே தற்போதைய சூழலுக்கு யதார்த்தமானது.

வெறும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமன்றி, நாட்டின் அனைத்து மாகாணங்களுக்கும் உடனடியாக மாகாணசபைத் தேர்தல்களை நடத்தி, அதிகாரப்பகிர்வை வழங்குவதே தற்போதைக்குச் சிறந்த வழியாகும்.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தத் தேவையான அனைத்து தீவிர முயற்சிகளையும் நாம் எடுத்திருந்தோம்.

முரண்பாடான அரசியல் சூழலால் அது தடைப்பட்டிருந்தாலும், தர்க்க ரீதியாகச் சிந்தித்து மாகாணசபைத் தேர்தல்கள் மூலம் 13ஐ நடைமுறைப்படுத்துவதே தீர்வுக்கான முதற்படியாகும்- என்றார். (ச-இ)




# தபால் திணைக்களச் சேவைகள் விரைவில் நவீனமயமாக்கப்படும்

## பிரதி அமைச்சர் கௌஷல்யா தெரிவிப்பு!

யாழ்ப்பாணம், ஓக.3

தபால் திணைக்களத்தின் சேவைகளை நவீனமயப்படுத்துவதற்கும் அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளது. அத்துடன் வடக்கு மாகாண மக்களுக்கு விரைவான, நம்பகமான மற்றும் தரமான தபால் சேவையை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று வெகுஜன ஊடகப் பிரதி அமைச்சர் கௌஷல்யா ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு கடந்த வாரம் வருகைதந்த பிரதி அமைச்சர் கௌஷல்யா ஆரியரத்ன, யாழ். பிரதான தபால் நிலையத்துக்கும் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார். இதன்போது தபால் சேவை ஊடாக வட மாகாணத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களின் முன்னேற்ற நிலை, நடைமுறையில் உள்ள செயற்பாடுகள் மற்றும் எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து தபால் திணைக்களத்தின் அதிகாரிகளுடன் விரிவாகக் கலந்துரையாடினார். வடக்கு மாகாணத்தில் தபால் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளின் தற்போதைய பயன்பாடு, அவற்றுடன் தொடர்புடைய நிர்வாகப் பிரச்சினைகள், தபால் விநியோகப் பணிகளைச் சிறப்பாக முன்னெடுக்கத் தேவையான வாகன மற்றும் போக்குவரத்து வசதிகளில் காணப்படும் குறைபாடுகள் குறித்தும் அதிகாரிகள் தெளிவுபடுத்தினர். (க)

# சிறைச்சாலையைக்கூட நிர்வகிக்க முடியாதவர்களிடம் எதற்கு ஆட்சி?

## எதிர்க்கட்சித் தலைவர் விளாசல்

கொழும்பு, ஓக.3

சிறைச்சாலைக் கட்டமைப்பைக்கூட முறையாக நிர்வகிக்க முடியாத தேசிய மக்கள் சக்தியினரால் இந்த நாட்டை முறையாக ஆள முடியுமா? நிச்சயமாக முடியாது. அதனால்தான் அவர்கள் எதேச்சதிகார வழியில் பயணிக்க முற்படுகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், மஹர சிறைச்சாலையில் ஏற்பட்டுள்ள மோதல் சம்பவமானது, நாட்டின் சிறைச்சாலைகளைக்கூட தற்போதைய ஆட்சியாளர்களால் முறையாக நிர்வகிக்க முடியவில்லை என்பதையே தோலுரித்துக் காட்டுகிறது. சிறைச்சாலைகளுக்குள் நிலவும் பிரச்சினைகளுக்கே தீர்வுகாண முடியாதவர்கள், எவ்வாறு ஒட்டுமொத்த நாட்டையும் ஆள்வார்கள்? நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வை வழங்குவார்கள்? ஏற்கனவே நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பில், சிறைச்சாலைகள் மற்றும் நீதி அமைச்சருக்கு எதிராக எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தபோது, அதனை ஆளுங்கட்சியினர் வாக்கெடுப்பின் மூலம் தோற்கடித்ததுடன் எதிர்க்கட்சியினரைப் பரிகாசமும் செய்தனர். தற்போது நீதி அமைச்சர் எங்கே இருக்கிறார்? அவரை அன்று பாதுகாத்து வாக்களித்த ஆளுங்கட்சியினரால் இனி மக்கள் முன் தலைகாட்ட முடியுமா? என்றும் எதிர்க்கட்சித் தலைவர் காட்டமாகக் கேள்வி எழுப்பியுள்ளார். நாட்டை நிர்வகிக்க முடியாது என்பதாலேயே அவர்கள் எதேச்சதிகாரப் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளனர் - என்றார். (ச-44)

# பெருந்திருவிழா

சாவகச்சேரி, ஓக.3

சாவகச்சேரி கெருடாவில் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும் திருவிழாக்காலத்தில், எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-9)

# வவுனியா தமிழ் ம.ம. வித்தியின் 'மகாவித்தியன்ஸ் நாள்'

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய பழையமாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'மகாவித்தியன்ஸ் நாள்-2026' நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது. பழைய மாணவர்கள் தங்களது பாடசாலைக்கால நினைவுகளை மீட்டுவதுடன், பாடசாலையின் அபிவிருத்திக்குத் தம்மாலான பங்களிப்பை வழங்கும் நோக்கிலும், 'நூற்றாண்டில் கேட்போர் கூடம்' எனும் திட்டத்துக்கு ஆதரவு நல்கும் வகையிலும் இந்த நிகழ்வு ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது.

ஆலய வழிபாட்டுடன் ஆரம்பமான நிகழ்வில், மரநடுகை, மங்கல விளக்கேற்றல், கொடியேற்றம் மற்றும் பாடசாலைக் கீதம் என்பன இடம்பெற்றன. தொடர்ந்து, பாடசாலை அதிபரின் சிறப்புரை இடம்பெற்றதுடன், பாடசாலைக்கு அளப்பரிய சேவையாற்றிய முன்னாள் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெற்றது. தொடர்ந்து, பெருந்திரளான பழையமாணவர்கள் பங்கேற்ற விசேட நடைபயணம் இடம்பெற்றது. நிறைவில் பழையமாணவர்களுக்கிடையிலான விறுவிறுப்பான மென்பந்துச் சுற்றுப் போட்டியும், வெற்றிபெற்ற அணிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன. (ச-110)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மனிதன் விட்டுவந்த கழிவுகளை பூமிக்கே தள்ளும் விண்வெளி!

## எச்சரிக்கிறது நாசா

கொழும்பு,ஓக.3

**பூமியின் தாழ்வட்டப் பாதையில் வலம்வரும் பல்லாயிரக்கணக்கான டன் எடையுள்ள 'விண்வெளிக் கழிவுகள்' கட்டுப்பாட்டை இழந்து பூமியை நோக்கி விழும் அபாயம் அதிகரித்துவருவதாக நாசா, ஐரோப்பிய விண்வெளி முகாமை உள்ளிட்ட சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.**

கடந்த சில தசாப்தங்களாக மனிதர்களால் விண்ணில் செலுத்தப்பட்ட செயற்கைக்கோள்கள், ராக்கெட்டுகளின் பாகங்கள் மற்றும் உடைந்த நுண்பொருள்கள் என சுமார் 13,000 டன்களுக்கும் அதிகமான கழிவுகள் பூமியின் சுற்றுப்பாதை யில் மிதந்துவரு கின்றன. இந்த விண்வெளிக் கழிவுகள் விநாடிக்குச் சுமார் 7 கிலோமீற்றர் வேகம் வரை அதிவேகத்தில் சுற்றிவருகின்றன. இந்த அதிவேக நகர்வினால், தற்போது செயற்பாட்டில் இருக்கும் தகவல் தொடர்பு மற்றும் வானிலை செயற்கைக் கோள்கள் மீது இந்தக் கழிவுகள் மோதி விபத்துகளை ஏற்படுத்தும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அவற்றின் ஆயுட்காலம் முடிவடைந்த விண்கலங்கள் புவியீர்ப்பு விசையின் காரணமாக மெல்ல மெல்லத் தமது பாதையிலிருந்து விலகி பூமியை நோக்கிவருகின்றன. பெரும்பாலான சிறிய பாகங்கள் வளிமண்டல உராய்வால் எரியும் போதிலும், பெரிய அளவிலான உலோகப் பாகங்கள் எரியாமல் பூமியின் மேற்பரப்பில் வந்துவிழும் அச்சுறுத்தல் நிலவுகிறது. கட்டுப்பாடற்ற முறையில் இவை வளிமண்டலத்தில் நுழையும் போது உருவாகும் வெளிச்சமும் அசாதாரண மாற்றங்களும் மனிதகுலத்துக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் புதிய சவாலாக உருவெடுத்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

### ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு
### நிறைவேற்று அலுவலர் வெற்றிடம்.

மேற்படி ஆலயத்தில் நிறைவேற்று அலுவலராக கடமையாற்ற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.

தகுதிகள்

1. கல்வித் தகைமை : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம்
   அல்லது
   அலுவலகங்கள், திணைக்களங்கள், நிர்வாக கடமைகளில் ஈடுபட்ட அலுவலர்.
2. சைவசமயத்தவராக இருத்தல் வேண்டும்.
3. 40 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
4. மாதாந்த சம்பளம் நேரடியாக பேசி தீர்மானிக்கப்படும்.
5. தங்குமிட, மதிய உணவு ஆலயத்தால் வழங்கப்படும்.
6. உரிய விண்ணப்பங்கள் 15.08.2026 மாலை 5.00 மணிக்கு முன் ஆலய அலுவலகத்தில் உள்ள விண்ணப்பப் பெட்டியில் போடுதல் வேண்டும்.
7. பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் செயலாளர். ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
8. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிறைவேற்று அலுவலர் விண்ணப்பம் எனக் குறிப்பிடவும்.

க.ஜீவசீலன்
கௌரவ செயலாளர்
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.



# ஈரானுக்கு எதிரான தாக்குதல் தற்காலிகமாக இடைநிறுத்தம்

## ட்ரம்ப் அறிவிப்பு!

வொஷிங்டன், ஓக.3

ஈரான் மீது நடத்தத் திட்டமிட்டிருந்த பெரிய அளவிலான இராணுவத் தாக்குதலை அமெரிக்கா தற்காலிகமாக இரத்துச் செய்துள்ளதாக அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தனது சமூக வலைத்தளத்தில் இதுகுறித்து பதிவிட்டுள்ள ட்ரம்ப், ஈரான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஒரு ஒப்பந்தத்துக்கான அடிப்படை வரைமுறைகள் எட்டப்பட்டுள்ளன. சர்வதேச கப்பல் போக்குவரத்துக்கு மிகமுக்கியமான ஹோர்மூஸ் நீரிணையை ஈரான் உடனடியாகவும் முழுமையாகவும் திறக்கவேண்டும். ஈரானின் அணுசக்தித் திட்டங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் முற்றிலும் நிறுத்தப்படவேண்டும். இந்த அமைதி முயற்சிக்கு இஸ்ரேல் நாடும் ஒப்புதல் அளித்துள்ளது. தாக்குதல் இரத்துச் செய்யப்பட்டாலும், ஈரான் மிக விரைவாக இந்த ஒப்பந்தத்தை இறுதிசெய்ய வேண்டும். உலகின் நன்மைக்காகவும், ஈரானின் எதிர்கால வாழ்வுக்காகவும் இந்தத் தாக்குதலை நிறுத்திவைக்க ஒப்புக்கொண்டுள்ளேன். சவுதி அரேபியா உள்ளிட்ட பிராந்திய நாடுகளின் தலையீட்டால் இந்தப் பேச்சுவார்த்தைச் சூழல் உருவாகியுள்ளது. ஒப்பந்தம் விரைவாக முடிவுக்கு வராவிட்டால், மீண்டும் தாக்குதல் நடத்த அமெரிக்கா தயங்காது - என்றார். (ச-இ)

## மணிவிழா வாழ்த்து



யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய
விவசாய பாட ஆசிரியர்

### திருமதி கலாநிதி செல்வராசா

விசேட பயிற்சி விவசாயம்

சேவைவிபரம்

| இல | பாடசாலை | காலப் பகுதி |
|---|---|---|
| 01 | யா/கெற்பேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | 21.09.1988-05.02.1991 |
| 02 | யா/பலாலி ஆசிரியர் கலாசாலை | 06.02.1991-31.12.1992 |
| 03 | யா/மிருசுவில் அ.த.க பாடசாலை | 01.01.1993-31.01.1994 |
| 04 | யா/மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை | 01.02.1994-31.12.1994 |
| 05 | யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் | 01.01.1995-31.12.2004 |
| 06 | யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் | 01.01.2005-31.12.2006 |
| 07 | யா/கொக்குவில் ஸ்ரீராம கிருஸ்ன வித்தியாலயம் | 01.01.2007-29.05.2013 |
| 08 | யா/பெரியபுலம் மகா வித்தியாலயம் | 30.05.2013-07.04.2015 |
| 09 | யா/விடத்தற்புளை கமலாசனி வித்தியாலயம் | 08.04.2015-07.02.2021 (முழு நேரம்) 08.02.2021-03.08.2026 பகுதி நேரம் |
| 10 | யா/மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை | 09.02.2021-03.08.2026 பகுதி நேரம் |

இன்று **03.08.2026** திங்கட்கிழமை ஓய்வுபெறும் விவசாய பாட ஆசிரியர்
திருமதி கலாநிதி செல்வராசா அவர்களிற்கு எமது மணிவிழா வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதோடு
அவரது ஓய்வு காலம் சிறக்க இறையாசிகளை வேண்டுகிறோம்.

**வாழ்த்துவோர்:** ஆசிரியர் நலன்புரி சங்கம்
**யா/ விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்.**

# ஸ்பெயினுக்குள் நுழைந்த 60,000 அகதிகள்!

## நெரிசலில் சிக்கி 57 பேர் உயிரிழப்பு

ஸ்பெயின்,ஓக.3

வட ஆபிரிக்க நாடான மொராக்கோவில் இருந்து இரு தினங்களில் மட்டும் ஸ்பெயினின் கட்டுப்பாட்டிலுள்ள சியூட்டா தீவுக்கு ஏறக்குறைய 60,000க்கும் மேற்பட்ட மக்கள் கடல்வழியாக அகதிகளாக புலம்பெயர்ந்துள்ளனர். எல்லையைக் கடக்க முயன்றபோது ஏற்பட்ட நெரிசல் மற்றும் கடலில் மூழ்கியதில் குறைந்தது 57 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

வட ஆபிரிக்காவின் மெக்ரிப் மண்டலத்தில் உள்ள 3.50 கோடி மக்களைக் கொண்ட சிறிய நாடே மொராக்கோ. பொருளாதார வளர்ச்சியில் வட ஆபிரிக்காவில் வேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரத்தை மொராக்கோ கொண்டிருந்தாலும், கடந்த சில ஆண்டுகளாக சிக்கலான நிலையில் இருக்கிறது. வறட்சி, பஞ்சம், படித்த இளைஞர்கள் மத்தியில் வேலையின்மை அதிகரிப்பு, ஊழல், சமூகத்தில் ஏற்றத்தாழ்வு விரிவடைதல், ஏற்றுமதியில் சீரற்ற நிலை ஆகிய சிக்கல்களை மொராக்கோ கடந்த சில ஆண்டுகளாக சந்தித்துவருகிறது. அதேவேளை ஸ்பெயின் உச்சநீதிமன்றம் சமீபத்தில் சட்டவிரோதமாக நாட்டுக்குள் நுழையும்-கடலில் இடைமறிக்கப் படும் புலம்பெயர்ந்தோரை சட்டநடைமுறைகள் இல்லாமல் உடனடியாக மொராக்கோவுக்குத் திருப்பி அனுப்பமுடியாது எனத் தெரிவித்தது. இந்தநிலையில் மனிதக்கடத்தலில் ஈடுபடும் சட்டவிரோதக் கும்பல்களே இக்கட்டான சூழ்நிலையைப் பயன்படுத்தி மக்களைத் தூண்டிவிட்டு எல்லை தாண்ட வைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இதேவேளை எல்லைக்குள் நுழைந்த சுமார் 60,000 பேரில், நிலைமையின் தீவிரத்தைப் உணர்ந்து சுமார் 50,000 பேர் மீண்டும் தன்னார்வமாக மொராக்கோ நிலப்பரப்புக்குத் திரும்பியுள்ளனர். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## 282 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றல்



கொழும்பு,ஓக.3

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு இணங்க, கொஸ்லந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உத்தகந்த பகுதியில் மேற்கொண்ட திடீர்ச்சோதனையின் போது 282 கிலோகிராம் உலர் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இந்த உலர் கஞ்சாத் தொகையின் சந்தைப் பெறுமதி ஒன்றரைக் கோடி ரூபாவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உலர் கஞ்சாப்பொதியுடன் 65 வயதுடைய நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

# ரவி செனவிரத்ன, ஷானி அபேசேகர மீது வழக்குத் தொடரின் தண்டனை நிச்சயம்!

### உதய கம்மன்பில தெரிவிப்பு

**கொழும்பு,ஓக.3**

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் தற்போதைய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன மற்றும் சி.ஐ.டி. பணிப்பாளர் ஷானி அபேசேகர ஆகியோருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டால், அவர்களுக்கு மரண தண்டனை கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளன என்று பிவிதுரு ஹெல உறுமய அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், அவர்கள் இருவர் மீதும் வழக்குத் தொடரப்படும் பட்சத்தில், விசாரணைகள் நேர்மையாகவும் பாரபட்சமின்றியும் இடம்பெறுவதை உறுதி செய்யும் வகையில், அவர்கள் வகிக்கும் தற்போதைய பதவிகளிலிருந்து உடனடியாக விலகவேண்டும்.

தாக்குதல் நடைபெற்ற காலத்தில் ரவி செனவிரத்ன மற்றும் ஷானி அபேசேகர ஆகிய இருவருமே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உயர் பொறுப்புகளில் இருந்தனர்.

உளவுத் தகவல்கள் கிடைத்தும் தடுக்கத் தவறினர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது. அவர்களை விடவும் அன்றைய சி.ஐ.டி. பிரதானிகளான இவர்களுக்கே சஹ்ரான் மற்றும் அவரது குழுவினரைப் பற்றி மிகத் தெளிவாகத் தெரிந்திருந்தது.

முன்னாள் பிரதானிகளைவிட இவர்கள் மீது கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைக்க முடியும். இவர்களுக்கு எதிராகச் சுமார் 11 குற்றச்சாட்டுகளை முன்வைத்து வழக்குத் தொடர முடியும். அவ்வாறு தொடரப்பட்டால் மரண தண்டனை கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம்- என்றார். (ச-இ)

## அரசின் அலட்சியத்தாலேயே சிறைச்சாலை மோதல்கள்!

### நாமல் தெரிவிப்பு



கொழும்பு,ஓக.3

நாட்டில் அடுத்தடுத்து இடம் பெற்று வரும் சிறைச்சாலை மோதல்களானது அரசாங்கத்தின் மோசமான நிர்வாகம், அலட்சியத்தின் வெளிப்பாடே என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். அவர் தனது எக்ஸ் தளப் பதிவில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சில வார இடைவெளியில் இடம்பெற்ற இரண்டாவது பெரிய சிறைச்சாலை மோதல் இதுவாகும். அவர், இது தனிமைப்படுத்தப்பட்ட சம்பவமல்ல. மோசமான நிர்வாகம், அலட்சியம் மற்றும் சீரழிந்துவரும் சிறைச்சாலை அமைப்பின் வெளிப்பாடு.

சிறைச்சாலைத்துறை பெரும் நெருக்கடியைச் சந்தித்துவரும் நிலையிலும், இதுவரை நிரந்தர ஆணையாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்படாதது ஏன்? பாதுகாப்பை அதிகரிப்பது தற்காலிகத் தீர்வாக மட்டுமே அமையும். அதிகளவிலான கைதிகள், போதிய வசதியின்மை, சுகாதாரக் குறைபாடுகள் மற்றும் புனர்வாழ்வுத் திட்டமின்மை ஆகிய அடிப்படைப் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும். தற்காலிக நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு, சீரழிந்துவரும் சிறைச்சாலை அமைப்பைச் சீரமைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று தெரிவித்துள்ளார். (ச-இ)

## புலிகளின் ஆதரவாளர்கள் உலகெங்கும் இயங்குநிலை

### சீலரத்ன தேரர் தெரிவிப்பு!

கொழும்பு,ஓக.3

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் கொல்லப்பட்ட போதிலும், அந்த அமைப்பின் ஆதரவாளர்கள் உலகெங்கிலும் உள்ள பல்வேறு நாடுகளில் இன்னமும் தொடர்ந்து இயங்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள் என ஜனசெத பெரமுனக் கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார். கொழும்பில் அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட இருநூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்காகப் போராடி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளதாகச் சிலர் பிரசாரம் செய்கிறார்கள். கடந்த காலத்தில் சிங்கள தேசத்துக்கும் பௌத்த சாசனத்துக்கும் ஏற்பட்ட அழிவுகளுக்கு யார் குரல் கொடுப்பது? இந்த நாட்டுக்கு முதுகெலும்புள்ள வலுவான தலைவரொருவர் அவசியமாகிறது. அன்று விடுதலைப்புலிகள் ஒடுக்கப்பட்டது போல, நாட்டில் உள்ள ஏனைய பாதாள உலக வன்முறைக் கும்பல்களையும் அரசு உடனடியாக அடக்க வேண்டும். அரசாங்கம் உடனடியாகச் சிங்கள மக்களையும் பௌத்த சாசனத்தையும் பாதுகாக்க முன்வர வேண்டும். நாட்டில் உள்ள அனைத்து வன்முறைக் கும்பல்களுக்கும் எதிராகத் தீர்க்கமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்" - என்றார். (ச-இ)



## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் முழு விசாரணை வேண்டும்!

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு,ஓக.3

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்கத் தவறிய அதிகாரிகளுக்கு நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டுள்ள போதிலும், இந்தத் தாக்குதலைச் சூத்திரதாரிகளாக இருந்து திட்டமிட்டவர்கள், நிதியுதவி செய்தவர்கள் மற்றும் இதன் பின்னணியில் இருந்து பயனடைந்த உண்மையான குற்றவாளிகள் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலால் கத்தோலிக்க மக்கள் பேரழிவைச் சந்தித்தனர். முஸ்லிம் மக்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்பட்டனர். அதேபோல, 2019 மற்றும் 2024 ஆகிய இரு ஜனாதிபதித் தேர்தல்களிலும் 'தேசிய பாதுகாப்பு' என்ற காரணியை மையப்படுத்தி எங்களது வாக்குகள் பெருமளவில் கைநழுவிச் சென்றன.

தாக்குதலைத் தடுக்கத் தவறியதற்காகவே பொலிஸ் அதிகாரிகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதே தவிர, தாக்குதலை நடத்திய மற்றும் அதன் பின்னணியில் இருந்த சூத்திரதாரிகள் இன்னும் முழுமையாகத் தண்டிக்கப்படவில்லை. எனவே இதன் பின்னணியில் இருந்து பயனடைந்த உண்மையான குற்றவாளிகள் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் - என்றார். (ச-இ)

# நீதிபதிகள் ஓய்வு வயது நீடிப்புக்கு பிரான்ஸ் சட்டத்தரணிகள் எதிர்ப்பு

கொழும்பு,ஓக.3

இலங்கையில் நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதெல்லையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள அரசியலமைப்புத் திருத்த முன்மொழிவு குறித்துப் பிரான்ஸ் தேசிய சட்டத்தரணிகள் பேரவை தனது கடுமையான கரிசனையை வெளிப்படுத்தியுள்ளதுடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாகப் பரிஸில் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியுள்ளது. இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் குழுவுக்கும், பிரான்ஸ் தேசிய சட்டத்தரணிகள் பேரவையின் ஐரோப்பிய மற்றும் சர்வதேச விவகாரங்களுக்கான குழுவுக்கும் இடையே இடம்பெற்ற கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, பரிஸில் நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பதவியில் இருக்கும் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதெல்லையை உயர்த்துவது, நீதித்துறையின் சுயாதீனத் தன்மையில் அரசாங்கம் நேரடியாகத் தலையிடும் முயற்சியாகவே பொதுமக்களால் பார்க்கப்படும்.

சட்டத்தின் ஆட்சியையும் முறையான சட்டக் கட்டமைப்பையும் நாட்டில் நிலைநிறுத்துவதற்கு சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற நீதித்துறை மிகவும் அவசியமானது.

எனவே நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை உயர்த்தும் இந்தப் புதிய அரசியலமைப்புத்திருத்தத்தை இலங்கை அரசு மேற்கொள்ளக்கூடாது என்றும் பிரான்ஸ் தேசிய சட்டத்தரணிகள் பேரவை தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ராஜபக்சக்களுக்கு சளைத்தவர்களல்லர் அநுரவும் தமிழர்கள் விடயத்தில் வீராப்பு

## வலி. கிழக்கு தவிசாளர் தெரிவிப்பு!

**யாழ்ப்பாணம், ஓக.3**

**ராஜபக்சக்கள் தமிழர்கள் விடயத்தில் எதைச் செய்தார்களோ, அதையே தற்போதைய அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கமும் தமிழர்களுக்குச் செய்துவருகின்றது என வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.**

வலிகாமம் வடக்கு, வயாவிளான் மக்கள் தமது சொந்த நிலங்களில் மீள் குடியேற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தின் முதல் நாள் நிகழ்வில் கலந்து கொண்டபோது அவர் இவ்வாறு ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வயாவிளானில் வாழ்ந்த பூர்வீகக் கிராம மக்களை இராணுவ அதிகாரத்தைப் பயன்படுத்தி வலுக்கட்டாயமாக வெளியேற்றிவிட்டு அங்கு இப்போது இராணுவ மருத்துவமனை அமையப் பெற்று வருகின்றது. மக்களின் நிலங்கள் மக்களுக்கே சொந்தம் எனக்கூறி ஆட்சிக்குவந்த தற்போதைய அரசு, மக்களின் உரிமைகளை ஏற்க மறுப்பதோடு, கடந்த கால ராஜபக்சக்கள் மற்றும் ஏனைய அரசுகளைப் போலத் தாங்களும் சளைத்தவர்கள் இல்லை என்பதைச் செயலில் காட்டி வருகின்றது. நாட்டில் இலஞ்சத்தையும் ஊழலையும் ஒழிப்பதை நாம் வரவேற்கின்றோம். ஆனால், ஓர் இனத்தின் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட அரச அராஜகங்கள், படுகொலைகள் மற்றும் இராணுவமயமாக்கல் குறித்து நடவடிக்கை எடுக்காதது ஏன்? தமிழர்கள் என்றால் எதையும் செய்யமுடியும் என்ற சிங்கள பேரினவாத மனநிலை இன்றைய ஆட்சியாளர்களிடமும் உள்ளமை தெளிவாகின்றது. அரசாங்கம் சொல்லளவில் பலவற்றைப் பேசினாலும், செயலளவில் ராஜபக்சக்களை ஒத்ததாகவே நடந்துகொள்கிறது - என்றார். (ச)

# நீதித்துறைக்குள் அரசு அப்பட்டமான தலையீடு

## சமன் ரத்னபிரிய தெரிவிப்பு!

கொழும்பு, ஓக.3


உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை 65 இலிருந்து 67 ஆக உயர்த்த அரசாங்கம் எடுக்கும் முயற்சியானது, நாட்டின் நீதித்துறைக்குள் முன்னெடுக்கப்படும் ஒரு அப்பட்டமான அரசியல் தலையீடாகும் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை உயர்த்துவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டு, தற்போது அதற்குரிய சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட நிலுவையில் உள்ளது. முற்றாகத் தோல்வியடைந்துள்ள அரசாங்கம், தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், எதிர்க்கட்சிகள் மற்றும் பொதுமக்களின் போராட்டங்களை அடக்கவுமே இத்தகைய ஆபத்தான அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவர முற்படுகிறது.

தற்போது உயர்நீதிமன்றத்தில் 4 வெற்றிடங்களும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 4 வெற்றிடங்களும், கீழ் நீதிமன்றங்களில் 17 வெற்றிடங்களும் நிலவுகின்றன.

வழக்கு விசாரணைகளை விரைவுபடுத்த இந்த வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதே சரியான தீர்வே தவிர, ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பதால் எவ்வித பலனும் கிடைக்கப்போவதில்லை.

இவ்வாறான மாற்றத்தைக் கொண்டுவருவதாயின் அதுதொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும். அரசாங்கம் தன்னிச்சையாக செயற்படுவதை நிறுத்திவிட்டு நாட்டுக்குப் பயனுள்ள வகையில் செயற்படவேண்டும்- என்றார். (ச-இ)



# பேராதனைப் பூங்காவில் இராட்சத 'ஓர்க்கிட்' மலர்வு

கண்டி, ஓக.3

உலகின் மிகப்பெரிய ஓர்க்கிட் தாவரமாகக் கருதப்படும் 'இராட்சத ஓர்க்கிட்' மலர்கள் கண்டி - பேராதனை அரச தாவரவியல் பூங்காவில் தற்போது அழகாகப் பூத்துக் குலுங்குகின்றன. இந்த அரிய வகை ஓர்க்கிட் தாவரம், கடந்த 2010ஆம் ஆண்டுக்குப் பிறகு தற்போதுதான் மீண்டும் பூத்துள்ளதாகப் பூங்கா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2 முதல் 3 மீற்றர் உயரமுள்ள பூங்கொத்துகளைக் கொண்ட இந்த அரிய மலர்க்கொத்தைக் கண்டுகளிக்க உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் குவிந்துவருகின்றனர். (ச-இ)





# கற்றல் உபகரணங்கள் வவுனியாவில் கையளிப்பு

வவுனியா, ஓக.3

நரசிங்கர் கல்வி அபிவிருத்தி நிதியத்தினால் குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புலமைப்பரிசில்கள் வழங்கும் நிகழ்வு வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலய கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

நரசிங்கர் ஆலய கல்வி சமூகஅபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் கோ.சிறீஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதி அமைச்சர் உபாலிசமரசிங்க, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ப.சத்தியலிங்கம், ம.ஜெகதீஸ்வரன், மேலதிக மாவட்டச் செயலாளர் நா. கமலதாசன், மாநகர முதல்வர் சு.காண்டீபன், பிரதேச செயலாளர் இ.பிரதாபன், பூந்தோட்டம் ஸ்ரீ லக்ஷமி நரசிங்கர் ஆலய நிர்வாகத்தினர், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-110)



# அறிவோர் ஒன்றுகூடல்!

கொழும்பு, ஓக.3

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வரும் 'அறிவோர் ஒன்றுகூடல்' நிகழ்வின் 954ஆவது அமர்வு எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் உபதலைவர் சட்டத்தரணி த.ப. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், கொக்குவில் இந்துக்கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபரான சுடர். ஆர். மகேந்திரன் கலந்து கொண்டு 'சமூகம் - பாடசாலை - அதிபர்' எனும் தலைப்பில் விசேட உரையாற்றவுள்ளார்.

தமிழ் ஆர்வலர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கொழும்பு தமிழ்ச் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (ச)

# பண மோசடியில் பொலிஸ் கைது!

அம்பாறை, ஓக.3

இங்கினியாகல பொலிஸ் நிலையத்தில் வருமானமாகப் பெறப்பட்ட சுமார் 290,000 ரூபா பணத்தை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் அந்தப் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பெண் பொலிஸ் அதிகாரி ஒருவர் அம்பாறை பொலிஸ் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட பெண் பொலிஸ் அதிகாரி அம்பாறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரண அறிவித்தல்



தோற்றம்
15 . 05 . 1949

மறைவு
31 . 07 . 2026

## நடராசா பாலசுப்பிரமணியம்

சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும், அப்பிளாக்கை சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பாலசுப்பிரமணியம் (பாலா அண்ணா) அவர்கள் கடந்த (31.07.2026) அன்று காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராஜதுரை - கமலாம்பாள் தம்பதியரின் மருமகனும், மனோரஞ்சிதம் அவர்களின் அன்புக் கணவரும், அம்பிகா, சித்திரா, சொரூபன், தேவகி ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்னேஸ்வரன், தீபன், பிரவீன், சுதர்ஷினி ஆகியோரின் அன்பு மாமனாரும், தீபிகா, தாருகன், நிஷானிகா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான நல்லையாநாதன், பேரின்பநாயகி, ஆனந்தராஜா, சற்குணதேவி, ஆனந்தகுமாரசாமி மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சுகி, மோகன், சங்கர், கோமதி ஆகியோரின் உடன் பிறவா சகோதரருமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2026) திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு சந்தை வீதி மாகியப்பிட்டியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**075 071 0197**

(CS/62015) J-1

# 45ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு



கடந்த 24.06.2026 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் அன்புச் செல்வன்

## பிரசாத் சச்சின்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளைமறுதினம் **05.08.2026** புதன்கிழமை காலை **7.00** மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் **07.08.2026** வெள்ளிக்கிழமை முற்பகல் **10.00** மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**இராச வீதி,**
**கோப்பாய் வடக்கு.**

**குடும்பத்தினர்**
**077 836 7479**

(CS/62014) N

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -14, நாவலர் வீதி, 147/1, 147/2 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனம் உரிமையாளர் செல்லப்பா தட்சணாமூர்த்தி என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை, இல.147, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாத்தையா வெள்ளைச்சாமி கைம்பெண் பவளம், இவ்வாதனம் தமது நீண்ட நெடுங்கால, இடையறாத எவருக்கும் மாறான ஆட்சியானது என குறிப்பிட்டு 01.09.2003 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திரு.யோ.சத்தியநாதன் முகதாவில் 551A ஆம் இலக்கத்தில் சீதன உறுதி மூலம் அதே ஊரைச்சேர்ந்த தனது மகளான க.இரத்தினகுமார் பெண் மங்களேஸ்வரிக்கு வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை பறையன்காடு நிலப்பரப்பு ஏழு குளி பதினாறின் மேல் பதின்மூன்று (நி.ப 7 கு 13/16) இதில் நிந்தமாக ஆட்சி செய்யப்பட்ட 1985.06.13 இல் உத்தரவு பெற்ற நில அளவையாளர் J.A.அன்றூவினால் 191ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் 1,2,3,4 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு இரண்டு குளி பதினைந்து தசம் ஐந்து ஐந்து. இதில் சொரியலாக எனக்குள்ள முப்பத்தியிரண்டில் இருபத்திநான்கிற்கு (24/32) பதிலாக நிந்தமாக குறித்த படத்தில் துண்டு ஒன்று ( து.1) ஆகிய குளி பதினாறு தசம் ஏழு எட்டு (கு 16.78)ம் வீடும். இதில் தெற்குப் பக்கமாக குளி மூன்றும் வீட்டின் பகுதியும் நீக்கி மிகுதி குளி பதின்மூன்று தசம் ஏழு எட்டு குளி 13.78) இதற்கு எல்லைகள்:

கிழக்கு :- பத்து அடி (10), அகலப் பொது ஒழுங்கை,
வடக்கு :- வெள்ளைச்சாமி மகள் பிறேமாவதியின் ஆதனம்,
மேற்கு :- ஆறுமுகம் நல்லதம்பியின் ஆதனம்,
தெற்கு :- மிகுதி ஆதனம்.

இன்னும் குறித்த படத்தில் துண்டு இரண்டில் (து.2) உள்ள அரைவாசிக் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப்பங்கும் தண்ணீர்ப்பங்கைப் பெறுவதற்காக குறித்த படத்தில் துண்டு நான்கின் (து.4) ஊடாக துண்டு இரண்டின் வடக்கு அருகாகப் போயும் வந்தும் தண்ணீர்ப்பங்கைப் பாவிக்கும் உரித்தும். மேலும் குறித்த துண்டு நான்கின்(து.4) ஊடாக தெற்கே உள்ள நாவலர் வீதியைப் பாவிக்கும் பாதை உரித்தும்.

தற்போது க.இரத்தினகுமார் பெண் மங்கனேஸ்வரி இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது க.இரத்தினகுமார் பெண் மங்களேஸ்வரி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**மாநகர முதல்வர்,**
**யாழ் மாநகர சபை.**

(Cr47870) N

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் மற்றும் நன்றியறிதல்

மண்ணுலகில்
04 . 08 . 1953

விண்ணுலகில்
04. . 07 . 2026



## அமரர் ஆறுமுகம் ஏகானந்தசிவம் (சிவம்)

(மண்டைதீவு - நல்லூர்)

(ஓய்வு நிலை முகாமைத்துவ உத்தியோகத்தர்- யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் யாழ் மாநகர சபை)

"படைத்ததை மீளப்பெறும் இறைவன், நினைவுகளை என்றும் அழிப்பதில்லை."

விதி வலியது எனத் தெரியும்...
இவ்வளவு கொடூரமானதென
கனவிலும் நினைக்கவில்லை...

வாழ்க்கை இனி நகரும்...
நாட்கள் மாதங்களாகும்...
மாதங்கள் ஆண்டுகளாகும்...

ஆனால்...
உங்கள் வெற்றிடம் மட்டும்
என்றும் நிலைத்திருக்கும்...

கடந்த 04.07.2026 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தின் தலைவரான அமரர் **ஆறுமுகம் ஏகானந்தசிவம்** அவர்களின் **31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு** இன்று 03.08.2026 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து **ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதிய போசன நிகழ்வும்** முற்பகல் 11.00 **மணியளவில், கோயில் வீதி, நல்லூரில்** அமைந்துள்ள **துர்க்காதேவி மணி மண்டபத்தில்** நடைபெறும்.

இந்நிகழ்வில் தாங்களும் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு, அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்து, இந்நிகழ்வைச் சிறப்பிக்குமாறு தங்களைப் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எங்கள் குடும்பத்தின் தலைவரின் திடீர் மறைவால் ஏற்பட்ட ஆழ்ந்த துயரத்தில் எங்களுடன் இணைந்து ஆறுதலும் ஆதரவும் வழங்கி, பல்வேறு வழிகளில் உறுதுணையாக நின்ற அனைத்து உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் நல்லுள்ளங்களின் அன்பு, பிரார்த்தனைகள், அரவணைப்பு மற்றும் ஆதரவிற்கு எங்கள் குடும்பத்தின் சார்பில் இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**தயவு செய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு,**
**தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு**
**அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்**

**முகவரி:**
**340, கோயில் வீதி, நல்லூர்.**

தொடர்பு: **077 557 3860**
**021 222 1458**

(cs.62013) N

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விலங்குகளை வதைத்தால் இனிச் சிறைத்தண்டனை!

**புதிய விலங்குநலச் சட்டம் வர்த்தமானியில் வெளியீடு!**

கொழும்பு,ஓக.3

இலங்கையில் விலங்குகளின் பாதுகாப்பு, கருணை, பராமரிப்பு மற்றும் நலனை உறுதிசெய்யும் வகையில் தயாரிக்கப்பட்ட புதிய விலங்குநலச் சட்டம் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. விவசாய, கால்நடை வளர்ப்பு, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரின் நேரடி வழிகாட்டலின் கீழ் இந்தப் புதிய சட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளது. அதற்கமைய புதிய வர்த்தமானி அறிவித்தலின் படி முள் வளையங்கள், சங்கிலிகளுக்குத் தடை: மத அல்லது கலாசார நிகழ்வுகளுக்கு விலங்குகளைப் பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டாலும், விலங்குகளின் கால்களில் முள் வளையங்கள் அணிவிப்பது, சங்கிலியால் அல்லது கம்பிகளால் கால்களைக் கட்டுவது போன்றவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. விலங்குகளை மிதமிஞ்சி நடக்க வைப்பது, அதிக சுமை ஏற்றுவது, சித்திரவதை செய்வது, வேதனையை ஏற்படுத்தும் வகையில் கயிறு அல்லது சங்கிலியால் கட்டிப்போடுவது தண்டனைக்குரிய குற்றங்களாகும்.


விலங்குகளைக் கொடூரமாக நடத்துவது, கர்ப்பிணி விலங்குகளைக் கொல்லுதல், பொறிகளை வைத்துப் பிடித்தல் மற்றும் சட்டவிரோத வேட்டையாடுதல், பறவைகளைச் சட்டவிரோதமாகக் கூண்டில் அடைத்தல், நோயுற்ற விலங்குகளைப் பொது இடங்களில் இறக்க விட்டுச் செல்வது போன்ற சட்டவிரோத மானவையாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் புதிய சட்டவிதிகளை மீறுவோருக்கு அபராதம், சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படும் வகையில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ச-இ)

## பெருவில் விமானம் விபத்து; 13 சுற்றுலாவிகள் உயிரிழப்பு!

நாஸ்கா,ஓக.3

பெருநாட்டில், நாஸ்கா நகருக்கு அருகில் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற விமானம் ஒன்று வயல்வெளியில் விழுந்து நொறுங்கியதில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். அந்த விமானத்தில் ஜெர்மனியைச் சேர்ந்த இரண்டு பேரும், ஸ்பெயினைச் சேர்ந்த இரண்டு பேரும் மற்றும் ஏழு இத்தாலிய சுற்றுலாப் பயணிகளும் இருந்ததாக பெருவின் வர்த்தக மற்றும் சுற்றுலா அமைச்சகம் அறிக்கையில் தெரிவித்துள்ளது. விமான விபத்து ஏற்பட்ட காரணம் குறித்து பெரு அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (ச-இ)



வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயப் பரபவ வருடப் பெருந்திருவிழாவின் பதினைந்தாம் நாள் பகல் திருவிழாவான மீனாட்சி சொக்கநாதர் உற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-66)

## காஸாவில் இஸ்ரேல் தாக்குதல்; மருந்து சேமிப்பகம் தரைமட்டம்

காஸா, ஓக.3

மத்திய காஸாவின் ஷேக் ரத்வான் பகுதியிலுள்ள மருந்துப் பொருள்களின் சேமிப்புக் கிடங்குகளை இஸ்ரேல் தாக்கி தரைமட்டமாக்கியது. இதில் 2 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அந்த மருத்துவமனை வளாகத்தின் அருகே ஹமாஸ் அமைப்பினர் ஆயுதங்களைப் பதுக்கிவைத்திருந்த இரகசிய இடத்தையே குறிவைத்துத் தாக்கியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

ஆயுத ஒப்படைப்புக்கு ஹமாஸ் உடன்பட்டுள்ளதாகக் கூறப்படும் ஒப்பந்தத்தை இஸ்ரேல் ஏற்றுக்கொண்டதா என்பதில் தொடர்ந்து நிச்சயமின்மை நிலவிவரும் நிலையில், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காஸாவில் மருத்துவக் கட்டமைப்புகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் சேமிப்புக் கிடங்குகள்மீது நடத்தப்படும் தாக்குதல்கள் பொதுமக்களின் வாழ்வாதாரத்தையும் அவசர மருத்துவ உதவிகளையும் கடுமையாகப் பாதித்துவருகின்றன. (ச-இ)

## பொலிஸ் ஊரடங்கு ராகமவில் நீக்கம்!

கொழும்பு,ஓக.3

மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தையடுத்து ராகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பிறப்பிக்கப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்கு உத்தரவு நேற்று நீக்கப்பட்டது.

ராகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹர சிறைச்சாலைப் பகுதியிலுள்ள 246 கெந்தலியத்த பாலுவ மேற்கு, 246 சி கெந்தலியத்த பாலுவ வடக்கு, 181 ஜி தம்புவ ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கே நேற்று முன்தினம் இரவு பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

பதற்ற நிலைமை நேற்று முற்பகலில் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதை அடுத்து இந்த ஊரடங்கு உத்தரவுதளர்த்தப்பட்டுநீக்கப்பட்டுள்ளது. (ச-44)

**வீடு வாடகைக்கு**

வெள்ளவத்தையில் 42 வது லேனில் இரண்டு அறைகள், இணைந்த குளியலறையுடன் கூடிய தொடர் மாடி வீடு, அறைகள் மாதம், கிழமை, நாள் வாடகைக்கு உண்டு

(CS/32272) J-1

தொடர்புகளுக்கு :- 075 278 6033

## மரண அறிவித்தல்



**சிவகுரு பரமேஸ்வரி**

ஆவரங்காலைப்பிறப்பிடமாகவும் ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு பரமேஸ்வரி அவர்கள் நேற்று (02.08.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2026) திங்கட்கிழமை முற்பகல் 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**8/3 ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்**
**077 563 8698**

(CS/32271) J-1



வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கம் நடாத்தும் 87ஆவது மாபெரும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் வல்வெட்டித்துறை இரத்ததானச்சங்கத் தலைவர் பா. வீரசுரேந்திரன் தலைமையில் நடைபெற்றது. பருத்தித்துறை ஆதார மருத்துவமனை இரத்தவங்கியினர் நேரடியாகக் கலந்துகொண்டு குருதிச்சேகரிப்பில் ஈடுபட்டனர். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பேருந்துக்கு நின்றவர் கூலர் மோதிச் சாவு!

வவுனியா, ஒக. 3
வவுனியா - ஓமந்தை, ஏ-9 வீதியில் பேருந்துத் தரிப்பிடத்தில் காத்திருந்த நபரை கூலர் வாகனமொன்று மோதியதில் அந்த நபர் பரிதாபமாக உயிரிழந்தார்.
பணிக்கன் நீராவி கிராமத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பில் தகவல் வழங்கப்பட்டதும் அந்தப் பகுதிக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-110)



## இராணுவப்...

வயாவிளான் மீள்குடியேற்ற அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் காணிகளின் உரிமையாளர்கள், மதகுருமார், அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள், பிரதேச சபைத் தவிசாளர்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொது மக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.
போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது:-
போர்க்காலத்தில் எமது காணிகளை விட்டு வெளியேறுமாறு நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். போர் நிறைவுக்கு வந்து 17 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் எமது காணிகள் எம்மிடம் ஒப்படைக்கப்படவில்லை. பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் எங்களின் காணிகளைப் படையினர் கைப்பற்றி சுகபோக வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். மக்களின் காணிகள் மக்களிடம் வழங்கப்படும் என்று ஜனாதிபதி அநுர பலமுறை கூறியுள்ளார். எனவே, அந்த வாக்குறுதிக்கு அமைய எமது காணிகளை எம்மிடம் ஒப்படைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றனர்.
இந்தப் போராட்டத்தின் நிறைவில் யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் யகம்பத்திடம் வயாவிளான் மீள்குடியேற்ற அமைப்பின் சார்பில் மனுவொன்று நேரடியாக வழங்கி வைக்கப்பட்டது. அத்துடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பி வைப்பதற்காக வடமாகாண ஆளுநரிடம் இன்றைய தினம் மனுவொன்று வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-26)

## வடமாகாணத்தில்...

உள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கலைப் பீடாதிபதியும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
தென்மேற்குப் பருவக்காற்றுக் காரணமாக மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் தென் மாகாணங்களுக்கு தற்போது கிடைத்துவரும் மழை எதிர்வரும் 6ஆம் திகதி வரை தொடரும் வாய்ப்புள்ளது. அத்துடன் இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் வளிமண்டல மேலடுக்கில் தளம்பல் நிலை உருவாகியுள்ளது. இதனால், இன்று இரவுமுதல் (நேற்று) எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை வரையான காலப் பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஒருசில பகுதிகளுக்குச் சற்று மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. குறிப்பாக திருகோணமலை மாவட்டத்துக்கு கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது - என்றுள்ளது. (அ-ம-66)

## பட்டாசு...

துள்ளார். குருநகர் ஐந்துமாடி குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த செல்வராசா சுஜீபன் (வயது-32) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
குருநகரில் இருந்து நேற்று அதிகாலை 2 மணியளவில் மடுமாதா தேவாலயம் நோக்கி யாத்திரை புறப்பட்டபோது அந்த நபர் பட்டாசைக் கொழுத்தியுள்ளார். எனினும் அது வெடிக்காத நிலையில் மிகநெருக்கமாகச் சென்று அதைப் பார்வையிட்டுள்ளார். இதன்போது அந்தச் சக்திமிக்க பட்டாசு வெடித்துச் சிதறியதில் அவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-26)

## மோ.சைக்கிள்...

திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் நூற்றுக்கணக்கான மக்கள் அங்கு சென்று தங்கியுள்ளனர். இவ்வாறு திருவிழாவுக்குச் சென்றிருந்த இளைஞர் ஒருவர் செலுத்திய மோட்டார் சைக்கிளே கட்டுப்பாட்டை இழந்து வீதியின் எல்லைக் கல்லுடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது. விபத்தில் படுகாயம் அடைந்த இளைஞர் உடனடியாக மீட்கப்பட்டு உயிர்காப்பு சிகிச்சைகள் வழங்கப்பட்ட போதிலும் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். சடலம் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், மடு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-56)

## வல்லைப்...

றது. 1989ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறைப் பகுதியில் இந்திய இராணுவத்தால் 63 தமிழர்கள் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன் நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இதில் கொல்லப்பட்டவர்களை அஞ்சலிக்கும் விதமாகவே தமிழ்த் தேசியப் பேரவையின் ஏற்பாட்டில் நேற்றையதினம் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.
தமிழ்த்தேசியப் பேரவையின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ந.ஸ்ரீகாந்தா சுடரேற்றி அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட 63 பொது மக்களுக்கும், இன விடுதலைக்காகப் போராடி மடிந்த அனைத்து மாவீரர்களுக்கும், யுத்தத்தால் கொல்லப்பட்ட அனைத்துத் தமிழ்மக்களுக்கும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான மலர் அஞ்சலியும், நினைவுரைகளும் நடைபெற்றன. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், மூத்த எழுத்தாளர் மு.ஈழத்தமிழ்மணி, தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர்.
நிகழ்வில் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவுகள், வல்வெட்டித்துறை நகரசபையின் பதில் நகரபிதா என்.பத்மநாதன், தமிழ்த்தேசியப் பேரவையின் வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-ம-66)

## இந்திய...

கட்சிகளின் பிரதிநிதிகள், மலையக அரசியற் தலைவர்கள் ஆகியோரை அவர் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தவுள்ளார். நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆறு தமிழ்க் கட்சிகள் அண்மையில் இணைந்து செயற்படத் தீர்மானித்திருந்தன. அந்தக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் விக்ரம் மிஸ்ரி சந்திக்க வாய்ப்பு அதிகமுள்ளது என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. (அ-ம)

## பிரதம...

நீதிபதிகள் ஓய்வுபெறும் வயதை மறுசீரமைக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் தற்போது ஈடுபட்டு வருகின்றது. இந்த நடவடிக்கைகளின் ஓர் அங்கமாகவே பிரதம நீதியரசர்களின் பதவிக் காலத்தையும் வரையறுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிய திருத்தங்களின்படி, பிரதம நீதியரசராகப் பொறுப்பேற்பவர் தனது ஓய்வு வயதை அடையாவிட்டாலும் 6 ஆண்டுகள் பதவிக்காலத்தை நிறைவு செய்தவுடன் கட்டாயமாகப் பதவியிலிருந்து விலக வேண்டும். இந்த முன்மொழிவுகள் ஏற்கனவே அரச சட்ட வரைவாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன. நவம்பர் மாதம் வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட முன்னர் இந்தச் செயல்முறையை நிறைவுசெய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (அ-ச)

## தமக்குத்தாமே...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
வீட்டில் யாரும் இல்லாத நிலையில் நேற்றுமுன்தினம் அவர்கள் இருவரும் தமக்குத் தாமே தீமூட்டியுள்ளனர். இதை அவதானித்த அயலவர்கள் அவர்களைக் காப்பாற்றி தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்த்தனர். இதையடுத்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சையின்போது நேற்று அதிகாலை உயிரிழந்தனர்.
வாழ விருப்பமில்லாத காரணத்தால் தமக்குத் தாமே தீமூட்டியதாக அவர்கள் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளனர். இதையடுத்து சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-66-27)

## நீதியமைச்சர்...

கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வலியுறுத்தியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நீர்கொழும்பு சிறையில் ஏற்பட்ட கலவரத்தில் 10 அதிகாரிகள் உயிரிழந்தனர். அத்துடன் கைதிகளும் பலியானார்கள். இவ்வளவு பெரிய வன்முறை நடைபெற்ற பின்னரும் சிறைச்சாலைகளின் பாதுகாப்புத் தொடர்பில் அரசாங்கம் அக்கறையுடன் செயற்படவில்லை. எனவே, மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்துக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் - என்றார். (அ-ம)

## கலவரத்தில்...

களுத்துறை, பதுளை, மட்டக்களப்பு மற்றும் பொலநறுவை ஆகிய பகுதிகளில் உள்ள சிறைச்சாலைகளுக்கே இவர்கள் மாற்றப்பட்டுள்ளனர். அதே வேளை, மஹர சிறைச்சாலைக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதால், அடுத்த மூன்று நாட்களுக்கு, கைதிகளை உறவினர்கள் பார்வையிட அனுமதி வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரியல் ஹீரோஸ் அணி இரண்டாவது சம்பியன்

முல்லைத்தீவு, ஓக. 3

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கோட்டை கட்டிய குளம், அம்பலப்பெருமாள் குளம் தோழர்கள் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், பருவகாலம் இரண்டுக்கான (Season 2) மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில், முழங்காவில் ரியல் ஹீரோஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியது. தோழர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில், துணுக்காய் தோழர் விளையாட்டுக்கழகமும், முழங்காவில் ரியல் ஹீரோஸ் விளையாட்டுக்கழகமும் மோதின. இதில் முழங்காவில் ரியல் ஹீரோஸ் விளையாட்டுக்கழகம் இரண்டாவது முறையாகவும் வெற்றியீட்டி சம்பியன் பட்டத்தைச் சுவீகரித்தது. நாடாளுமன்ற உறுப்பினர் காதர்மஸ்தான், வெற்றிபெற்ற கழகங்களுக்கான வெற்றிக்கிண்ணங்களையும், பரிசில்களையும் வழங்கினார். (க)



பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தின், மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு, வித்தியாலய சிவன் கோவில் முன்றலில், கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (க-9)


யாழ்ப்பாணம் குடாநாடு லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில், யாழ். நகர்ப்பகுதியில் 500 பேருக்கு இலைக் கஞ்சி வழங்கும் திட்டம், நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (க)






வலி. வடக்கு பிரதேசசபைக்குட்பட்ட வறுத்தலைவிளான் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் போக்குவரத்து நலன் கருதி, வல்லை அராலி வீதியில் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்பட்ட பேருந்துத் தரிப்பு நிலையம் மக்கள் பாவனைக்காக அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. சபைத் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் இதனைத் திறந்துவைத்தார். (ச)

அரச அலுவலகங்களில் பிரகடனப்படுத்தப்பட்ட நேர்மை வாரத்தை முன்னிட்டு தெல்லிப்பழை பிரதேசசபை உப அலுவலகத்தில் டெங்கு ஒழிப்புச் சிரமதானம் உப அலுவலக பொறுப்பதிகாரி தலைமையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. இதில் உத்தியோகத்தர்கள் பங்கேற்று சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (ச)



# வித்தியாபுரத்தில் மக்கள் சந்திப்பு

முல்லைத்தீவு, ஓக. 3

ஒட்டுசுட்டான், வித்தியாபுரம் கிராம அலுவலர் பிரிவு, அரை ஏக்கர் திட்டக் கிராம மக்களுடன், நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குறைகேள் சந்திப்பை நடத்தினார்.

இதன்போது பிரதான வீதி சீரின்மை மற்றும் சட்டவிரோதமாக மூடப்பட்டுள்ள வீதிகள், முன்பள்ளிக்குச் சுற்றுவேலி அமைத்தல் உள்ளிட்ட குறைபாடுகளை மக்கள் முன்வைத்தனர். (க-246)



விதையனைத்தும் விருட்சமே அமைப்பினின் ஒழுங் கமைப்பில், கருகம்பனை கலாசார மண்டபத்தில் 50 ஆவது குருதித் தான முகாம் அண்மையில் நடைபெற்றது. (க-159)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இல் உள்ள அவர்களது பணிமனையில் 03.08.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org